# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை 26 திங்கட்கிழமை (11-12-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:15


# சமாதானத்தை வலியுறுத்தி கொழும்பில் இன்று 10 ஆயிரம் பேர் ஒன்றுகூடுகின்றனர்

## 1 கிலோமீற்றர் நீளமான பதாகையில் ஒப்பமிடுவர்

**கொழும்பு,டிசெம்பர்11**

**யுத்தத்தைத் தீவிரப்படுத்தாமல் சமாதான முயற்சியை முன்னெடுக்க வேண்டுமென்று வலியுறுத்தி பத்தாயிரம் பேர் இன்று கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் கூடவிருக்கின்றனர்.**

**இந்த ஒன்றுகூடல் நிகழ்வில் பங்குபற்றுவோர் சமாதானத்தை வலியுறுத்தி சுமார் 1 கிலோமீற்றர் நீளமான - துணியாலான - பதாகையில் கையொப்பமிடவுள்ளனர்.**

தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடன் மக்கள் சமாதான முன்னணி இந்த ஒன்றுகூடல் நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

யுத்தம் மூலம் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது என்பதால் யுத்தத்தையும வன்முறைகளையும் தீவிரமாக்க வேண்டாமென்றும் - சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான பேச்சுக்கள் உடன் ஆரம்பிக்கப்படவேண்டும் என்றும் - இந்த ஒன்றுகூடலில் வலியுறுத் தப்படவிருக்கின்றது.

## தாக்குதலுக்கு இலக்கானவர் மரணம்

மட்டக்களப்பு ஆரையம்பதியில் தீபாவளித் தினத்தன்று ரெலோ உறுப்பினர்களினால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவர் 45 நாள்களின் பின்னர் நேற்று மாலை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மரணமானார்.

பரமேஸ்வரன் யுகேந்திரன் (வயது-27) என்ற இந்த இளைஞர் அன்றையதினம் கடுமையாகத் தாக்கப்பட்டபின் மண்ணில் பகுதியாகப் புதைக்கப்பட்டார் எனக் கூறப்படுகின்றது.

சுயநினைவிழந்த நிலையில் உறவினர்களால் மீட்கப்பட்ட அவர் மட்டக்களப்பு பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அங்கு சிகிச்சை எதுவும் பலனளிக்காத நிலையில் அவர் உயிரிழந்தார். (உ-5-21)

## இணுவிலில் மோதல்

யாழ்ப்பாணம்,டிசெ.11

இணுவில் சிவகாமி அம்மன் கோயில் பின் வீதியில் நேற்று நண்பகல் 12.15 மணியளவில் ரோந்து வந்த படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றுள்ளது.

சுமார் அரை மணி நேரம் அப்பகுதியில் கிரனேட் வெடிப்புகளும், துப்பாக்கிப் பிரயோகமும் இடம்பெற்றன. இம் மோதலில் ஏற்பட்ட சேத விவரங்கள் உறுதிப்படுத்தப்படவில்லை.

அந்தப் பகுதிக்குள் நேற்று மாலை வரை பொதுமக்கள் எவரும் செல்ல அனுமதிக்கப்படவுமில்லை. அங்கு பெரும் பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது.

அதேசமயம் -

இளைஞன் ஒருவனின் சடலம் நேற்று மாலை சுன்னாகம் பொலீஸாரால் யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

(உ-3-5)

## பழைய முறிகண்டிக் காட்டில் தொல்பொருள் சுவடுகள்!

வவுனியா,டிசெ.11

அக்கராயன் பழைய முறிகண்டிக் காட்டுப் பகுதியில் தொல்பொருள் சுவடுகள் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அக்கராயன் குளத்துக்கு வடமேற்கில் உள்ள பழைய முறிகண்டிக் குளத்தருகே அதன் மண்டைக் கல்லாறின் கிழக்குப் புறத்தில் சுமார் ஓர் ஏக்கர் நிலப்பரப்பில் இந்தத் தொல்பொருள் சுவடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

மூன்று அடி உயரம் வெளியே தெரியக் கூடியதாக ஓர் அடி அகலமுடைய பத்தொன்பது கற்கள் நடப்பட்ட நிலையில் இங்கே காணப்படுகின்றன.

பத்துப்பத்தாக வட்டவடிவில் மூன்று இடங்களில் இந்தக் கற்கள் நடப்பட்டுள்ளன.

கறுப்பு சிவப்பு நிற ஓடுகள், மட்பாண்டங்கள், செங்கற்கள் போன்றவையும் இந்தப் பகுதியில் காணப்படு

(12ஆம் பக்கம் பார்க்க)

## பேசுவதற்குப் புலிகள் முன்வந்தும் அரசாங்கம் இழுத்தடிப்பது ஏன்?

### கேள்வி எழுப்புகின்றது ஐ.தே.க.

கொழும்பு,டிசெ.11

சமாதானப் பேச்சு நடத்த புலிகள் முன்வந்துள்ள போதும் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தாது அரசு காலங்கடத்தி வருகின்றது. உடனடியாகப் பேச்சுக்களை ஆரம்பிக்க அரசு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

இவ்வாறு கோரியிருக்கின்றார் ஐ.தே.கட்சியின் பேச்சாளர் கருணை சேன கொடித்துவக்கு.

சமாதானப்பேச்சுத் தொடர்பாக ஐ.தே.கவின் நிலைப்பாட்டைத் தெரிவிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இப்படிக் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்குக் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தாமல் அரசாங்கம் காலங்கடத்துகிறது. இது தொடர்பில் அரசாங்கத்தினுள் வேறுபட்ட நிலைப்பாடு காணப்படுகிறது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்தை வலியுறுத்த மடுமாதா சொரூபம் தெற்கே ஊர்வலம்

கொழும்பு,டிசெ.11

சமாதானத்தை வலியுறுத்தி மன்னார் மடுமாதாவின் திருச்சொரூபத்தை அடுத்த வருடம் தெற்கே ஊர்வலமாக எடுத்துச்செல்ல ஆயர்கள் முடிவு செய்துள்ளனர்.

கடந்த வியாழன், வெள்ளிக்கிழமைகளில் கொழும்பில் இடமபெற்ற ஆயர்கள் மாநாட்டிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஆயர்கள் மாநாட்டில் எடுக்கப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## 1250 பயணிகளுடன் நாளை திருகோணமலைக்கு கப்பல்!

### பயணச்சீட்டு இன்று விநியோகம்

யாழ்ப்பாணம்,டிசெ.11

காங்கேசன்துறையில் இருந்து 'லங்காமுடித்த' கப்பல் மூலம் ஆயிரத்து 250 பயணிகளை நாளை திருகோணமலைக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இந்தச் சேவைக்கான பயணச்சீட்டு வழங்கும் பணி இன்று காலை முதல் யாழ்.ரயில் நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

முதல் வருபவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் பயணச் சீட்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சுகளை உடன் ஆரம்பிக்க சந்திரிகா மற்றும் பிரபாவிடம் வேண்டுகோள்

### நீதி, சமாதான ஆணைக்குழு விடுத்தது

யாழ்ப்பாணம்,டிசெ.11

சமாதானப் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்குமாறு கோரி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரன் ஆகியோரிடம் யாழ்.கத்தோலிக்க மறை மாவட்ட நீதி, சமாதான ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

மனித உரிமைகள் தினமான நேற்று கத்தோலிக்க மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக்குழுவினால் யாழ்.மரியன்னை பேராலயத்தில் சமாதான வழிபாடுகள் நடத்தப்பட்டன.

இந்த வழிபாடுகளில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். வழிபாட்டின் இறுதியில் சமாதானப் பேச்சுக்களை வலியுறுத்தி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் தலைவர் வே.பிரபாகரனுக்

(11ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல், விமானப் பயணப் பதிவு இனி மணியம்ஸ் கட்டடத்தில்!

யாழ்ப்பாணம்,டிசெ.11

வெளியிடங்களுக்கு கப்பல் மற்றும் விமானம் மூலம் செல்லும் பயணிகளுக்கான பதிவுகள் மேற்கொள்ளும் பணி இன்று முதல் ஸ்ரான்லி வீதியில் உள்ள மணியம்ஸ் கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் பணிகளை மேற்கொள்ளும் வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபையின் அலுவலகத்திலேயே இதுவரை காலமும் இந்தப் பணிகள் இடம்பெற்றுவந்தன.

அந்த அலுவலகத்தில் நிலவிய இட நெருக்கடி மற்றும் மக்களின் போக்குவரத்துப் பிரச்சினைகளை அடுத்து புதிய இடத்துக்கு அந்தச் செயற்பாடுகள் மாற்றப்பட்டுள்ளன.

## குடாநாட்டில் 'டெங்கு' காய்ச்சல்! இரத்தப் பரிசோதனை மூலம் உறுதி!!

### மக்களை விழிப்புடன் இருக்குமாறு எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.11

குடாநாட்டில் 'டெங்கு' காய்ச்சல் பரவியிருப்பது கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட இரத்தப் பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

திருநெல்வேலிப் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவருக்கே 'டெங்கு' காய்ச்சல் ஏற்பட்டிருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

திருநெல்வேலிப் பகுதியைச் சேர்ந்த எஸ்.மகேந்திரன் (வயது 27) என்பவருக்கே 'டெங்கு' காய்ச்சல் தொற்றியுள்ளது.

குடாநாட்டில் 'டெங்கு' காய்ச்சல் தொற்றியிருப்பதாக கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட இரத்தப் பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள முதல்

(11ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் பயணச் சீட்டு விநியோகம்; முறைகேடுகள் நீக்கப்படுமாம்!

### ஈ.பி.டி.பி. தெரிவிக்கிறது

யாழ்ப்பாணம்,டிசெ.11

யாழ்ப்பாணம் - திருகோணமலை கப்பல் பயணத்துக்கான பயணச்சீட்டு விநியோகத்தில் நிலவும் சீர்கேடுகள் மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்று ஈ.பி.டி.பி. அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணம் திருகோண மலை கப்பல் சேவைக்கான அனுமதிச்

(12ஆம் பக்கம் பார்க்க)

உ
சிவமயம்

## ஓராண்டு பூர்த்தி தினம்

முன்னாள் பிரபல விதானையார் கதிர்காமத்தம்பி அவர்களின் செல்வப் புதல்வியும், நெல்லியடியின் முதல் வியாபார ஸ்தாபகரும், முன்னாள் பிரபல வர்த்தகர் குமாரசாமி கந்தவனம் அவர்களின் அன்பு மனைவியுமான

**நல்லைநாயகி அவர்கள்**

இவ்வுலகை விட்டகன்று இன்று ஓராண்டு பூர்த்தி தினமாகும். அன்னார் பிறப்பற்று இறைதுயில்கொள்ள இறையருள் கிட்டுவதாக!

'விண்மீன் அங்காடி'
'குமாரசாமி கந்தவனம் பில்டிங்'
பிரதான வீதி, நெல்லியடி.

(C/14248)


## மங்களகரமான திறப்பு விழா

மகிந்தன் கொம்பியூட்டர் கிராபிக்ஸ்



**Our Services**

- Type Setting
- Stencil Cutting
- Roneo
- Off set printing
- Photo copy services

காலம் : 11/12/2K (திங்கள்)
நேரம் : 10.00-12.00
14, K.K.S வீதி,
சுன்னாகம்


## கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்



## அமரர் முதலித்தம்பி கண்ணன்

(உத்தியோகத்தர், கொமர்ஷல் வங்கி - யாழ்ப்பாணம்)

**தோற்றம்: 30-08-1953 மறைவு: 10-12-2000**

அன்னார் காலமானதையிட்டு உளவேதனை அடைவதுடன் ஆறாத் துயரில் மூழ்கியிருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*கொமர்ஷல் வங்கி,*
*யாழ்ப்பாணம்.*

நிர்வாகத்தினரும்,
உத்தியோகத்தர்களும்,
கொமர்ஷல் வங்கி.

(C/14246)

## மரண அறிவித்தல்

### திருமதி நகுலேஸ்வரி சத்தியசீலதேவன்

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலேஸ்வரி சத்தியசீலதேவன் 09-12-2000 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சத்தியசீலதேவனின் அன்பு மனைவியும், கஜேந்தினியின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் - நகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பாலேஸ்வரி, தில்லையீசன், இரத்தினேஸ்வரி மற்றும் ரகுதேவன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் திரு.திருமதி கந்தசாமி (கனடா), தியாகராசா ஆகியோரின் பாசமிகு மருமகளும் புவனேஸ்வரி, சத்தீஸ்வரி, சூரியகுமாரன் ஆகியோரின் மைத்துனியும் சேந்தன், பவதாரிணி, வாகினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (11-12-2000) திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
திருமதி தில்லையீசன் புவனேஸ்வரி
(மைத்துனி)

*சம்பியன் ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு.*
(81556)

## தூதுவர்களுடன் ரணில் சந்திப்பு

கொழும்பு,டிசெ.11

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்குடன் அரசாங்கமும் சர்வதேச சமூகமும் மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளுக்கும் ஐ.தே. கட்சி பூரண ஆதரவு வழங்கும் என்று அக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்கு நாடுகளின் தூதுவர்களிடம் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ், நோர்வே, சுவீடன், தென்கொரியா ஆகிய நாடுகளின் தூதுவர்களை கடந்த புதனன்று சந்தித்தபோதே ரணில் இந்த உறுதிமொழியை வழங்கினார். (இ-3-20)


**விக்னா**
கல்வி நிறுவனம்

O/L பிரிவு 2
EVENING CLASS
காலை: 9 மணி - 1 மணி
ஆரம்பம்: 15.12.2K

O/L DAY CLASS
(8.30 - 1.30)
ஆரம்பம்: ஜனவரி 5
(81547)

யாழ். வொகனியல் கல்லூரி
நாவலர் வீதி - யாழ்ப்பாணம்

**ACCOUNTING**
**2001 A/L**

அறவிடமுடியாக்கடன்
ஐயக்கடன் சீராக்கம்

By. MUGUNTHAN B.B.A. (HONS) F.M.Spe.

பல மாணவர்களுக்காக இவ் அலகு மீண்டும் ஆரம்பமாகின்றன.

11-12-2000
(81548)

**BARATHY**
சித்தன்கேணி

**A/L DAY CLASS**
நடைபெறுகின்றன.

ECO. திரு. வரதராஜன்
திரு. சண்
ACC. திரு. முகுந்தன்
COM. திரு. பசில்
LOG. திரு. R.P.சர்மா
TAM. / H.C. திரு. பாலா
GEO. திரு. குமரன்
DRA. திரு. சுதன்
R.C. திரு. ரவீந்திரன்
H.M. திரு. N.T. தரன்

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
(81549)

ராஜா யாழ்ப்பாணம்
இன்று முதல் குதூகல ஆரம்பம்
அஜித் (இரு வேடம்)
சிம்ரன், ஜோதிகா,
விவேக் மற்றும் பலரின் நடிப்பில்
வாலி
காட்சிகள்:10.30, 2.00 (பி.நே.)

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
விஜய், ஜோதிகா
நடித்த
S.J.சூர்யாவின்
குஷி
தினசரி - 11.00, 2.30 (பி.நே.)
(81372)


## மரண அறிவித்தல்கள்

### முதலித்தம்பி கண்ணன்

(உத்தியோகத்தர், கொமர்ஷல் வங்கி - யாழ்ப்பாணம்)

புலோலி கிழக்கு பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட முதலித்தம்பி கண்ணன் நேற்று (10.12.2000) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் முதலித்தம்பி - பூமகள் தம்பதிகளின் அன்பு மகனும், ஜெயராணியின் அன்புக் கணவரும், ரமணன் (மாணவன், ஹாட்லிக் கல்லூரி), ரங்கன் (மாணவன், ஹாட்லிக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலைமகள், நாமகள், முகுந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பாலசுப்பிரமணியம், ஜெயலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2000) திங்கட்கிழமை பி.ப. 2.30 மணியளவில் அவரது (புலோலி கிழக்கு, பருத்தித்துறை) இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கடற்கரை வீதி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*புலோலி கிழக்கு,*
*பருத்தித்துறை.* (C/14245)

தகவல்:
ஜெயராணி (மனைவி)

### மளவராயர் வேலுப்பிள்ளை

(முன்னாள் செயலாளர், நகராட்சி மன்றம் - திருகோணமலை, உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்க முன்னாள் ஸ்தாபகரும், தலைவரும்)

மறவன்புலோவைச் சேர்ந்தவரும் பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமான மளவராயர் வேலுப்பிள்ளை நேற்று (10.12.2000) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் வனதலட்சுமியின் (முன்னாள் எழுதுவினைஞர், பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும் ரமணன் (கொம்பியூட்டர் லான் இஞ்சினியர்- கொழும்பு), காலஞ்சென்ற மணிவண்ணன் மற்றும் வாசு (புத்தளம்), வதனன் (டாக்டர், தேசிய வைத்தியசாலை - கொழும்பு), கீதா (நியூசிலாந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கௌரி (புகுப்பாய்வாளர் திணைக்களம் - கொழும்பு), திருமதி சாந்தி, சேந்தன் (நியூசிலாந்து) ஆகியோரின் அன்பு மாமனும் விஷ்ணுப்பிரியன், அஸ்வினி, சஞ்ஜீவ்கரன், மணிவர்ணர் ஆகியோரின் பேரனும் இராமலிங்கம் (மலேசியா), காலஞ்சென்ற நடராசா சிவக்கொழுந்து (மலேசியா), டாக்டர் சிவப்பிரகாசம் (மலேசியா), கந்தையா, விஜயசுந்தரம், சிவகாமி (சிங்கப்பூர்), திருமதி ஜெகதவப்பிரதாபன் (கொழும்பு), இ.ம.விசுவலிங்கம் (சுழிபுரம் மேற்கு), மயில்வாகனம் (லண்டன்) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2000) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*திருமதி வேலுப்பிள்ளை,*
*8, டீன்ஸ்ரன் பிளேஸ்,*
*கொழும்பு - 3.*
*T.P - 574094* (81552)

தகவல்:
இ.ம.விசுவலிங்கம்
(சகோதரன், சுழிபுரம் மேற்கு)

### சிவசுப்பிரமணியம் அருணகிரிநாதன்

(ஓய்வுபெற்ற **M.S.O.**, தபால்கந்தோர் - யாழ்ப்பாணம், பொருளாளர், விவசாய சம்மேளனம் - கொக்குவில் கிழக்கு)

பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் கோணாவளை லேன், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சி.அருணகிரிநாதன் அவர்கள் 8.12.2000 அன்று சிவப்பேறெய்தினார்.

அன்னார் அமரர் சிவசுப்பிரமணியம் - மாணிக்கம் தம்பதியினரின் பாசமிகு மகனும் கனகசபை - நல்லம்மா ஆகியோரின் மருமகனும் சந்திரதேவியின் அன்புக் கணவரும் சுதா, கிரிதரா (மருத்துவபீடம், மருந்தியல்துறை - யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அருமைத் தந்தையும், சிவகுமார் (**T.K.S.Tex - Colombo**), சுகிர்தா ஆகியோரின் அன்பு மாமனாரும் பொன்னம்பலநாதன் (ப.நோ.கூ.சங்கம் - யாழ்.) செந்தில்நாயகம், வடிவானந்தம் (கால்நடை வைத்திய நிலையம், திருநெல்வேலி), பாக்கியலீலா, சர்வேஸ்வரி, நரேந்திரன் (ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி), அருணேஸ்வரி (**Denmark**) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் பரமேஸ்வரி, இராஜேஸ்வரி, தவஞானசரஸ்வதி, நரேந்திரன் (விலங்கியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்), அமரர்கள் சோமசுந்தரம், பாலகிருஷ்ணன் மற்றும் மகேஸ்வரி, சண்முகநாதன், பாலச்சந்திரன், லீலாவதி ஆகியோரின் மைத்துனரும் மெதுர்ஷன், யதுஷிகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11-12.2000) திங்கள் காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கிரிதரா (மகன்)

*கோணாவளை வீதி,*
*கொக்குவில் கிழக்கு.* (81554)

### திருமதி எலிசபேத் சூசைதாசன்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி எலிசபேத் சூசைதாசன் 09.12.2000 சனிக்கிழமை புதுக்குடியிருப்பில் காலமானார்.

அன்னார் **M.A.**சூசைதாசனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சூ.டொனாற்றஸ், சூ.கலிஸ்ரஸ் (ஜேர்மனி), சூ.றெமீஜியஸ் (லண்டன்), திருமதி **N.E.**தர்மரட்ணம் (ஆசிரியை, யாழ்.சென். சாள்ஸ் ம.வி.), சூ.அத்தனாசியஸ் (இந்தியா), திருமதி மெர்லின் றேமன் (பிரான்ஸ்), சூ.நேரியூஸ (பிரான்ஸ்), திருமதி கரோலின் அன்ரனி (பிரான்ஸ்), திருமதி காமலின் ஒஸ்ரின் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் திருமதி டியூலா கலிஸ்ரஸ் (ஜேர்மனி), திருமதி மேசி.றெமீஜியஸ் (லண்டன்), ச.தர்மரட்ணம் (ஆசிரியர் - சென். றோக்ஸ் றோ.க.வி.), றேமன், பாஸ்கரன் (பிரான்ஸ்), திருமதி காந்திமதி நேரியூஸ் (பிரான்ஸ்), அன்ரனி (பிரான்ஸ்), ஒஸ்ரின் (கனடா) ஆகியோரின் அன்புமிகு மாமியாரும் கெவின், சொபியா, நிரோன், புளொறிஸ்ரா, அலன், அருண்சன் (பிரான்ஸ்), ஜீன், யோண், ஆன் (லண்டன்), சுஜீனா (கனடா), கிளனிஸ்ரா (யா/வேம்படி மகளிர் உயர் கல்லூரி), சபிஸ்ரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.தர்மரட்ணம்
(மருமகன்)

*இல.5, கச்சேரி கிழக்கு*
*ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.* (81557)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# உதயன்

## பூனைக்கு விளையாட்டு..,!

பிந்திய செய்திகளின் பிரகாரம், யாழ்ப்பாணம் பொதுசன நூல் நிலையம் குறித்தும் வன்னிக்கு உணவு, மருந்துப் பொருள்கள் அனுப்புவது குறித்தும் நாடாளுமன்றத்தில் சிறப்பு விவாதம் ஒன்று நடைபெறக்கூடும். இது விடயத்தில் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மிகத தீவிரமாக உள்ளனர்.

இருந்தாற் போலத் திடீரென இவர்களுக்குத் தமிழ் மக்களின் விடயங்களில் இவ்வளவு அக்கறை ஏற்பட்டுள்ளதா என்று வாசகர்கள் ஆச்சரியப்படக் கூடும். சோழியன் குடுமி சும் மாவா ஆடும் ......?!

வன்னிப் பிரதேசங்களுக்குத் தட்டுப்பாடு இன்றி உணவு மற்றும் மருந்து வகைகளை அரசாங்கம் அனுப்புமானால், எரிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பொதுசன நூல்நிலையத்தின் புனரமைப்புக்கு தனது ஒருவருடச் சம்பளத்தை அன்பளிப்பாக வழங்குவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

அதனை வைத்துக்கொண்டு, ஐ. தே. கவை கண்டிக்கவும், சேறு பூசவும் உத்தேச சிறப்பு விவாதம் உதவும் என்று அரசாங்க உறுப்பினர்கள் கருதுகிறார்கள் போலும். நாடாளுமன்றத்தில் வைத்தே எதிரணியினரைத் ''தாளிக்க'' இது நல்ல சந்தர்ப்பம் என்பதும் இவர்களின் கருத்தாயிருக்கும்

வன்னிக்கு உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருள்களை அரசு வேண்டிய அளவு அனுப்பி வைக்கிறது. விடுதலைப்புலிகள் தான் வன்னியில் உணவு, மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகக் கூறி அரசுக்கு எதிராகப் பிரசாரம் செய்கிறார்கள்.—

அவர்களுக்கு ஆதரவாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் ஒத்து ஊதுகிறார். அவர் புலிகளின் ஆதரவாளர்; அவர்களுடன் தொடர்புடையவர்; என்று காட்டுவதற்கு அரச தரப்பினர் முனைவர். அதன் மூலம் சிங்கள மக்கள் மத்தியில் அவருக்குள்ள — அவரது கட்சிக்கு உள்ள — செல்வாக்கையும் ஆதரவையும் குறைக்கலாம் என்ற கணக்குடனேயே அரச எம். பிக்கள் சிறப்புவிவாதத்தில் அக்கறை கொள்கிறார்கள்!

யாழ்ப்பாணப் பொதுசன நூல் நிலையம் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் எரிக்கப்பட்டது. மாவட்ட சபைத் தேர்தல் காலத்தில் நடைபெற்ற இந்த கலாசாரப் படுகொலைக்கு, கல்விப் படுகொலைக்கு சூத்திரதாரிகள் ஐ. தே. கவின் அப்போதைய உயர் தலைவர்களே என்பது ஏற்கனவே பேசப்பட்ட விடயம்.

இதனை நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்துவதன் மூலம் ஐ. தே. க.மீது தமிழ் மக்களை வெறுப்புக் கொள்ளச் செய்யலாம் என்று ஆளுந்தரப்புஎம். பிக்கள் நினைக்கலாம்

சமாதானப் பேச்சுக்கான சூழ்நிலையை உருவாக்கி, நாட்டின் பிரதான பிரச்சினை தீர்வதற்கு உழைப்பதற்குப் பதிலாக, பழைய விவகாரங்களைத் தூக்கி வைத்து, ஒரு சாரார் மீது மறுசாரார் சேறு பூசுவதில் தென்னிலங்கை அரசியல் வாதிகள் ஈடுபடுவதால்ஆகப் போவது எதுவுமில்லை.

தேசிய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் முழுமுயற்சியுடன் மனதைச் செலுத்தாமல், அரசியல் லாபம் தேடும் சில்லறை விடயங்களில் தெற்கு அரசியல் வாதிகள் ஈடுபாடு காட்டுகிறார்கள், இது 'பூனைக்கு விளையாட்டு, கண்டெலிக்குச் சிவன் போகும்' நிலைக்கு நிகரானதே!

# வேலைநிறுத்தத்தில் குதிக்க கூட்டுறவாளர்கள் முஸ்தீபு

யாழ்ப்பாணம், டிசெ 11

வட்டு-கிழக்கு கூட்டுறவுச் சேவை ஆணைக்குழு சிபார்சு செய்தபடி கூட்டுறவுப் பணியாளர்களுக்கு சம்பள உயர்வையும், நிலுவையையும் ஜனவரி முதலாம் திகதி வழங்க வேண்டும்; இல்லையேல் ஜனவரி 10 ஆம் திகதிமுதல்வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிப்போம்.

—இப்படி எச்சரிக்கை வெளியிட்டிருக்கின்றது கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம்.

யாழ். நகரில் நேற்று இடம் பெற்ற தொழிற் சங்கத்தின் கூட்டத்திலேயே இதுதொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு—கிழக்கு கூட்டுறவுச் சேவை ஆணைக்குழு கூட்டுறவுப் பணியாளர்களின் சம்பளத்தை மீளாய்வு செய்து 31/99 இலக்கச் சுற்று நிருபத்தை வெளியிட்டிருந்தது. இந்தச் சுற்று நிருபம் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி சகல கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வந்து சேர்ந்தது.

இந்தச் சுற்றுநிருபப்படி சம்பள உயர்வை வழங்கும்படி பணியாளர்கள் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளிடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்தனர்.

ஒரு வருட காலமாகியும் கூட்டுறவுச் சங்க நிர்வாகங்கள் அந்தச் சுற்றறிக்கையை நடைமுறைப் படுத்தவில்லை.

இந்தச் சுற்றுநிருபப்படி சம்பள உயர்வையும் அதற்கான நிலுவையையும் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி வழங்கவேண்டும். அவ்வாறு வழங்காவிடில் ஜனவரி 10 ஆம் திகதியில் இருந்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிப்போம் — என்றுள்ளது

இந்தத் தீர்மானத்தைக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்துக்கும், கூட்டுறவு வேலையாளர் ஆணைக் குழுவுக்கும், சகல கூட்டுறவுச் சங்க நிர்வாகங்களுக்கும் அனுப்புவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

(மற்றொரு செய்தி நான்காம் பக்கத்தில்)

[உ 3]

## கிராம அலுவலர் பதவி உயர்வு

வலி. வடக்கு, டிசெ. 11

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நான்குகிராம அலுவலர்கள் தரம் ஒன்றுக்குப் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

சேவை மூப்பின் அடிப்படையில் வழங்கப்பட்ட இந்த நியமனம் மூலம் நல்லூர், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சாவகச்சேரி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் கடமையாற்றும் கிராம அலுவலர்களே பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவு — திருமதி கனக சபாபதி, தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவு — சி. தேவராசா, சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவு — நா. கணேசு, சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவு — நா. பரமசிவம் ஆகியோரே பதவி உயர்வுபெற்றவர்களாவர். (ம-86)

## வேம்பொடுகேணி மாணவருக்கு

யாழ்ப்பாணம், டிசெ. 11

வேம்பொடுகேணி சி.சி த.க. பாடசாலையில் தரம் 9 இல் கல்வி கற்று தற்சமயம் வேறு பாடசாலைகளில் பயிலும் மாணவர்களை மாவட்ட மட்டப் பரீட்சைப் புள்ளிகளுடன் நாளை செவ்வாய்க் கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலத்திற்கு சமுகம் தரும்படி பாடசாலை அதிபர் கேட்டுள்ளார். (உ-3)

## கட்டடப்பொருள் விற்பனை நிலையம் திறப்பு

அரியாலை, டிசெ. 11

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் கட்டடப்பொருள்கள் விற்பனை நிலையம் ஒன்றை இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கவுள்ளது.

பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கிக்கு அருகில் இந்த விற்பனை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

[ஐ-17]

## திறப்புவிழா

வலி. கிழக்கு, டிசெ. 11

திருநெல்வேலி பிரதேச சபையில் கடமையாற்றும் தொழிலாளர்களுக்கென புதிதாக பிரதேச சபையினால் திருநெல்வேலி பாற்பண்ணை வீதியில் அமைக்கப்பட்ட விடுதியின் திறப்புவிழா இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர்ப் பிரதேச சபையின் தலைவர் க. மணிபல்லவராஜன் தலைமையில் நடைபெறவுள்ளது.

[ஐ-180]

## வகுப்பறை கட்டடம் அமைப்பு

புன்னாலைக்கட்டுவன், டிசெ 11

புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் தரம் 1, 2 ஆகிய வகுப்பறைகளை புதிய பாடத் திட்டத்தின் மறுசீரமைப்புக்கமைவாக அமைக்கும் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

அததுடன் மாணவர்களின் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு அரங்கு மண்டபமும், பாடசாலை அலுவலகமும் கட்டப்பட்டு வருகின்றன.

[ஐ-133]

## நாளை

கார்த்திகை 27
செவ்வாய்க்கிழமை
திதி: பிரதமை
பிற்பகல் 1.49 வரை.
நட்சத்திரம்: மிருகசீரிடம்
முற்பகல் 10.32 வரை.
விநாயகர் விரதம் ஆரம்பம்
ஐபநேரம்: 10.50-12.20
ராகுகாலம்: 3.20 - 4.50
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## வங்கி ஊழியர் மரணம்

தலையில் பலத்த காயத்துடன் கடந்த 7 ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட தனியார் வங்கி உத்தியோகத்தர் மூன்று நாள்களின் பின் நேற்று அங்கு மரணமானார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த —யாழ் வர்த்தக வங்கி உத்தியோகத்தரான — முதலித்தம்பி கண்ணன் (வயது 47) என்பவரே உயிரிழந்தவராவார். சடலம் மரணவிசாரணை மற்றும் பிரேதபரிசோதனையின் பின் மனைவியிடம் கையளிக்கப்பட்டது.

(உ-15-139)

## கடற்றொழிலாளர் கூட்டம்

வலி. மேற்கு பகுதியிலுள்ள கடற்றொழிலாளர் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் செயலாளர்களுக்கான சந்திப்பு ஒன்று இன்று காலை 10 மணிக்கு சுழிபுரத்திலுள்ள வலி. மேற்கு பிரதேச சபையின் தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளுமாறு மேற்படி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு வலி. மேற்கு பிரதேச சபைத தலைவர் ந. திரிலோகநாதன் அழைப்பு விடுத்துள்ளார். (உ-5)

## பாரதியார் ஜயந்தி தினம்

கொழும்புத்துறை, டிசெ. 11

யாழ். குடாநாட்டில் உள்ள அனேக பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், இந்து மாமன்றங்கள் ஏனையபொது அமைப்புக்களில் இன்று திங்கட்கிழமை மஹாகவி சுப்பிரமணிய பாரதியார் ஜயந்தி தினத்தை ஒட்டி நிகழ்ச்சிகள் இடம்பெறவிருக்கின்றன.

(உ-30)

## பெண் காயம்

சட்டையில் பற்றிய தீயினால் இளம் பெண் ஒருவர் உடலின் பெரும்பாலான பகுதிகளில் தீக்காயங்களுக்கு உள்ளானார்.

குருநகரில் நேற்று நண்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கிறிஸ்துராசா குயின்வலன்ரீனா (வயது 32) என்ற பெண்ணே எரிகாயங்களுக்கு உள்ளானார்.

வெந்நீர் வைப்பதற்காக அடுப்பு மூட்டிய வேளையே தீ பற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15)

## பலத்த சேதம்

வண்ணார்பண்ணை மேற்கில் உள்ள பி. ஏ. தம்பி வீதி கடந்த சுமார் 25 வருட காலமாகத் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாது உள்ளது. இதனால் மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு வீதி குண்டுங் குழியுமாகக் காணப்படுகின்றது.

இது தொடர்பாக இப்பகுதி மக்கள் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும், புனர்வாழ்வு அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவிடம் முறையிட்டுள்ளனர்.

இவ்வருட இறுதிக்குள் இந்த வீதியைத் திருத்த நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதி அளித்துள்ளார்.

(ஐ-73)

## ஆஜராக உத்தரவு

நெல்லியடி, டிசெ. 11

புலோலிதெற்கு புற்றளைப் பிள்ளையார் ஆலயக் கிணற்றில் கை, கால் கட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட இளைஞரின் சடலத்தை பிரேத பரிசோதனை செய்த மந்திகை மருத்துவமனையின்முன்னாள் பதில் மாவட்ட வைத்திய அதிகாரியை ஜனவரி மாதம் 31 ஆம் திகதி பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜராகுமாறு மாவட்ட நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் புலோலி தெற்கு சாரையடியைச் சேர்ந்த கணபதிப் பிள்ளை பத்மநாதன் [வயது 27] என்பவரே சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை கடந்த 6 ஆம் திகதி பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் நடைபெற்ற சமயம் இறந்த இளைஞனின் சடலத்தை அக்காலப்பகுதியில் பிரேத பரிசோதனை செய்த பதில் மாவட்ட வைத்திய அதிகாரி திருமதி ரஞ்சினி சிதம்பரநாதனை அடுத்த மாதம் 31 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகி சாட்சியமளிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார் [உ-119]

# வேலணை புனரமைப்புப் பணிக்கு 21 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

வேலணை, டிசெ. 11

வேலணைப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கென இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து சுமார் 21 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வேலணைப் பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகரகுருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இந்நிதி ஒதுக்கீட்டிலிருந்து பின்வரும் வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவிருப்பதாக அவர் தெரிவித்தார்

★ செட்டிபுலம் ஐயனார் கோயில் புனரமைப்பு—ஒரு லட்சம் ரூபா.

★ வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மன் ஆலயப் புனரமைப்பு — இரண்டரை லட்சம் ரூபா.

★ துறையூர் ஐயனார் கோயில் புனரமைப்பு— 2 லட்சம் ரூபா.

★ துறையூர் முருகன் கோயில் புனரமைப்பு —4 லட்சம் ரூபா.

★ புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலைக் கட்டில்கள் கொள்வனவு—2 லட்சம் ரூபா.

★ நயினாதீவு அரசினர் வைத்தியசாலைக்குக் கட்டில்கள் கொள்வனவு—2 லட்சம் ரூபா.

★ நயினாதீவு மகா வித்தியாலயக் கணனி திருத்தமும், கணனி அறை நிர்மாணித்தலும்—இரண்டு லட்சத்து 25 ஆயிரம் ரூபா.

★ நயினாதீவு கணேசா வித்தியாலயத்திற்கு மின் பிறப்பாக்கி வழங்கலும், கணனி திருத்தமும்— 75 ஆயிரம் ரூபா.

★ மண்கும்பான் தமிழ்க் கலவன் பாடசாலை புனரமைப்பு—2 லட்சம் ரூபா.

★ வேலணை நடராசா வித்தியாலயம் புனரமைப்பு—2 லட்சம் ரூபா.

★ புங்குடுதீவு கனிஷ்ட வித்தியாலயம் புனரமைப்பு —2 லட்சம் ரூபா.

(ஐ-167)

## காயம்

யாழ்ப்பாணம், டிசெ. 11

மதுபோதையில் தனது பெற்றோருடன் சண்டை பிடித்துக்கொண்டிருந்த கணவனைத் தடுக்கச் சென்றதாகக் கூறப்படும் மனைவி, கணவனின் கத்தி வெட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தார்.

புன்னாலைக்கட்டுவனில் நேற்று முன்தினமிரவு இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் தயாபரன் புவனேஸ்வரி (வயது 25) என்ற பெண்ணே வெட்டப்பட்டுக் காயமடைந்தவராவார். அவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [இ-15]

## உதயவாக்கு

பல தோழர்களைப் பெற்றவன் ஒரு தோழனையும் பெற்றவனல்ல.

- அரிஸ்டாட்டில்

## விற்பனைக்கு

2001 ஆம் ஆண்டுக்கான வண்ணப்படக் கலண்டர்கள், பொக்கற் கலண்டர்கள் மற்றும் Canon 12, 15 பிரதி இயந்திரங்கள், உதிரிப் பாகங்கள் விற்பனைக்கு உள்ளன.

தொடர்பு:

**குமரன் விருதி**

67, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(81540)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 1930 — 03 — 01

உதிர்வு: 1999 — 11 — 22

### திருமதி வைத்தியலிங்கம் செல்லம்மா

அன்பின் ஒளி விளக்காய்
பாசத்தின் உறைவிடமாய் இருந்த
எங்கள் அம்மாவே! (மாமியே)
ஓராண்டு சென்றாலும் ஓயாது உம் கவலை
உங்கள் நினைவு எங்கள் நெஞ்சை விட்டகலாது.

மகன்:- வை. பாலசுப்பிரமணியம், (பாபு)
மருமகள்:- மணிமேகலை
பேரப்பிள்ளைகள்:- தீனு, வைஷ்ணு, பானு.

லிங்கராஜர் வீதி,
நல்லூர் வடக்கு.

(81496)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சரவணமுத்து இராசையா

மலர்வு 18 — 11 — 1910

உதிர்வு 02 — 12 — 1998

திதி: 11 — 12 — 2000

ஆண்டுகள் இரண்டு ஆனதோ இன்று
அகிலத்தை விட்டு நீங்கள் சென்று.
விழிநீர் இங்கே கசிவதும் ஏனோ
விண்ணோடு நீங்களும் சென்றதால்தானே!

என்றும் தங்கள் நினைவுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஆனைக்கோட்டை சந்திக்கருகில்,
ஆனைக்கோட்டை.

(81505)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

இம்மாதம் 9 ஆம் திகதி வரை பயண அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்:-

### யாழ்ப்பாணம்

(145521ஏ), (157161ஏ), (170908ஏ), (170908பி), (171544ஏ), (173880ஏ), (142999ஏ), (150094ஏ), (150094பி), (150094சி), (150094டி), (156590ஏ), (161150ஏ), (161150பி), (161150சி), (161150டி), (161150ஈ), (163495ஏ), (165974ஏ), (166014ஏ), (166014பி), (166014சி), (166354ஏ), (168578ஏ), (168578பி), (168630ஏ), (168819ஏ), (168819பி), (168862ஏ), (168862பி), (168874ஏ), (168889ஏ), (168892ஏ), (168892பி), (171650ஏ), (171671ஏ), (171671பி), (171711ஏ), (171711பி), (171717ஏ), (171743ஏ), (171749ஏ), (171761ஏ), (711811ஏ), (171811பி), (171859ஏ), (171859பி), (171859சி), (171909பி), (171921ஏ), (171921பி), (171921சி), (171944ஏ), (171993ஏ), (172093ஏ), (172102ஏ), (172137ஏ), (172792ஏ), (173495ஏ), (173495பி), (173495சி), (173801ஏ), (173819ஏ), (173819பி), (173819சி), (173819டி), (173819ஈ), (173820ஏ), (173820பி), (173881ஏ), (173882ஏ), (173883ஏ), (173884ஏ), (173885ஏ), (173886ஏ), (173890ஏ), (173891ஏ), (173892பி), (173893ஏ), (173894ஏ), (173895ஏ), (173896ஏ), (173897ஏ), (173897பி), (173913ஏ), (173913பி), (173913சி), (173913டி), (65975பி).

### கோப்பாய்

(139443ஏ), (139443பி), (139443சி), (139443டி), (167642ஏ), (167642பி), (167642சி), (167642டி), (167659ஏ), (167659பி), (167699ஏ), (167699பி), (168373ஏ), (168393ஏ), (168393பி), (168393சி), (168429ஏ) (168429பி), (170925ஏ), (173278ஏ), (173314ஏ), (173931ஏ), (173931பி), (173938ஏ), (173938பி), (174047ஏ), (174205ஏ), (174205பி), (174205சி), (168264ஏ), (168264பி), (168264சி), (173214ஏ), (173214பி), (173228ஏ), (173228பி) (173273ஏ), (173273பி), (173273சி).

### நல்லூர்

(145006ஏ), (156898ஏ), (156898பி), (156898சி), (156984ஏ), (162841ஏ), (162841பி), (162862ஏ), (162862பி), (162862சி), (162862டி), (163730ஏ), (163730பி), (167646ஏ), (167646பி), (167646சி), (170641ஏ), (170659ஏ), (170660ஏ), (170662ஏ), (170665ஏ), (170903ஏ), (170904ஏ), (170909ஏ), (170918ஏ), (171574ஏ), (171564ஏ), (171565ஏ), (171565பி), (171609ஏ), (174126ஏ), (174126பி), (174126சி), (174128ஏ), (174130ஏ), (174130பி), (174130சி), (174130டி), (174138ஏ), (174138பி), (174138சி), (174149ஏ), (17149பி), (174151ஏ), (174183ஏ), (174183பி), (174183சி), (156207ஏ), (156207பி), (163422சி), (163522ஏ), (163522பி), (163601ஏ), (163601பி (163618ஏ), (166103ஏ), (166104ஏ), (166222ஏ), (166222பி), (166222சி), (166253ஏ), (166253பி), (166354பி), (166404ஏ), (168451ஏ), (168451பி), (168527ஏ), (168527பி), (168527சி), (168527டி), (168527ஈ), (168527எவ்), (168527ஜி), (168693ஏ), (168693பி), (168869ஏ), (168893ஏ), (168893பி), (168899ஏ), (168907ஏ), (168912ஏ), (168912பி), (168919ஏ), (168923ஏ), (168927ஏ), (168927பி), (168927சி), (168927டி), (168927ஈ), (168927எவ்), (171653ஏ), (171676ஏ), (171708ஏ), (171708பி), (171708சி), (171738ஏ), (171750ஏ), (17806ஏ), (171806பி), (171806சி), (171806டி), (171806ஈ), (171806எவ்), (171884ஏ), (171925ஏ), (171955ஏ), (171963ஏ), (171975ஏ), (171977ஏ), [171996ஏ], [172135ஏ], [173135பி], [172477ஏ], [163492ஏ].

### சண்டிலிப்பாய்

[170935ஏ]

### உடுவில்

[156915ஏ], [167688ஏ], [167688பி], [173997ஏ], [174000ஏ], [174000பி], [174000சி], [174020ஏ], [174020பி], [174024ஏ], [174031ஏ], [174061ஏ].

(ஐ-6)

## திறந்தவெளி அரங்கிற்கு அடிக்கல்

வேலணை, டிசெ. 11

வேலணையில் புதிதாக அமையவிருக்கும் திறந்தவெளி அரங்கிற்கான அடிக்கல் நடும் விழா கடந்த வாரம் நடைபெற்றது.

வேலணைப் பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகரகுருமூர்த்தி அடிக்கல்லினை சம்பிரதாயபூர்வமாக நடுகை செய்தார்.

இந்நிகழ்வில் பிரதேச சபை செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திறந்தவெளி அரங்கு நிர்மாணிப்பதற்கென வேலணை பிரதேச சபையால் வடமாகாண மீள்குடியேற்ற புனர்வாழ்வு அதிகார சபை நிதியிலிருந்து சுமார் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது.

(ஐ-167)

## ஒளிவிழா

யாழ்ப்பாணம், டிசெ. 11

இளவாலை றோமன் கத்தோலிக்கப் பெண்கள் விடுதி மாணவிகளின் ஒளிவிழா நிகழ்வுகள் இன்று காலை 9 மணிக்கு விடுதி மண்டபத்தில் நடைபெறும்.

விடுதி முகாமையாளர் அருட்சகோதரி மேரி பிறிஜித் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் மாணவிகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இவ்வருட இறுதித் தவணை விடுமுறைக்காக மாணவிகள் இன்று வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர் எனவிடுதி முகாமையாளர் தெரிவித்தார்.

(ஐ-6)

## ஆணைக்குழுவின் நடவடிக்கை தாமதம் என்கின்றன சங்கங்கள்

அரியாலை, டிசெ. 11

வடக்கு—கிழக்குமாகாணக் கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவின் நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாகவே யாழ். குடாநாட்டில் உள்ள கூட்டுறவுப் பணியாளர்களுக்கான புதிய சம்பளத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாமல் இருப்பதாகக் கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய சம்பளக் கொடுப்பனவை நடைமுறைப்படுத்தும் பொருட்டு ஆளணி அங்கிகாரம் பெறுவதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பித்தும் இதற்கான அங்கிகாரம் இதுவரை வந்து சேரவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் புதிய சம்பளத் திட்டத்தை அமுல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ம-17)

## வீடுகளுக்குச் சென்று போலியோ மருந்து வழங்கல்

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் போலியோ சொட்டு மருந்து 5 வயதுச் சிறுவர்களுக்கு, வீடு வீடாகச் சென்று வழங்கப்பட்டு வருகின்றது.

இம் மாதம் 2 ஆம் திகதி யாழ். மாவட்டத்தில் இந்தச் சொட்டு மருந்து வழங்கப்பட்ட போதிலும், அன்று போலியோ சொட்டு மருந்தைப் பெறத் தவறிய சிறுவர்களுக்கே தற்பொழுது அவ்வப் பகுதி பொதுச் சுகாதார பரிசோதகர்களும் குடும்ப நல உத்தியோகத்தர்களும் வீடுகளுக்குச் சென்று வழங்கி வருகின்றனர்.

(ஐ—109)

## பிரிவுத்துயர் பகிர்வு

எங்கள் அன்புக்கும் மதிப்புக்குமுரிய வேலணை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்

திரு. சு. சுந்தரலிங்கம்

அவர்களின் அன்புச் சகோதரி

### திருமதி செல்லத்துரை தங்கரெத்தினம்

அவர்கள் சுவிஸில் மறைந்தமையையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கிராம அபிவிருத்திச் சங்கம்,
வேலணை மேற்கு.

(81538)

யாழ்ப்பாணம்

# கொழும்புத்துறைப் பிரதேசம் வெறிச்சோடிக் கிடக்கிறது!

## வீடுகளைப் பார்க்கச் சென்றோர் சேதங்களையே கண்டனர்

அரியாலை,டிசெ.11

கொழும்புத்துறை மேற்கு மற்றும் கிழக்குப் பகுதிகள் மக்கள் நடமாட்டம் இன்றி மயான பூமியாகக் காட்சியளிக்கின்றது.

கடந்த மே மாத முற்பகுதியில் இப்பகுதியில் இருந்து மக்கள் தமது உடைமைகளை கைவிட்டு நிலையில் இடம் பெயர்ந்தனர்.

கொழும்புத்துறையில் தற்போது கணக்கர் சந்தியில் உள்ள இராணுவ காவலரணில் இராணுவத்திடம் அனுமதி பெற்ற பின்பு மக்கள் தமது வீடுகளைப் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுதிகளில் தென்னைகள் உட்பட பயன்தரும் மரங்கள் தறிக்கப்பட்டு பாலைவனம் போன்று காட்சியளிக்கின்றது.

அத்துடன் பாஷையூர் சென்.ஜோசப் வித்தியாலயம், கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம் போன்றவையும் சேதமடைந்துள்ளன. அங்கிருந்த தளபாடங்கள் மற்றும் பொருள்கள் காணாமல் போயுள்ளன.

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 22ஆம் இலக்கக் கிளை உடைக்கப்பட்டு திறந்த நிலையில் காட்சியளிக்கிறது.

இந்தப் பகுதியில் உள்ள ஆலயங்கள் சிலவும் சிறு சேதத்துக்கு உள்ளாகி இருக்கின்றன. அங்கிருந்த பெறுமதியான பொருள்கள் காணாமல் போயுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

சுவாமியார் வீதியின் குறுக்கு வீதிப் பகுதியூடாக பதுங்கு குழிகள் வெட்டப்பட்டிருப்பதால் வீதியூடாகச் செல்லமுடியாது உள்ளது. மக்கள் சிரமப்பட்டு இந்தப் பதுங்கு குழியைக் கடந்தே தமது வீடுகளைப் பார்வையிட்டுத் திரும்பினர். (ஐ-17)





பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்புவிழா அண்மையில் நடைபெற்றது. விழாவில் பாடசாலை அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் மாணவத் தலைவி செல்வி விஜிதா லோகநாதனுக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்:-வடமராட்சி பிரதேச செய்தியாளர்)

## சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவித்து இன்று

# காணாமற்போன படையினரின் உறவினர் நோர்வே தூதரகம் நோக்கி பேரணி!

கொழும்பு,டிசெ.11

நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவித்து யுத்த முனையில் காணாமற்போன படையினரின் உறவினர்கள் சங்கம் இன்று திங்கட்கிழமை நோர்வே தூதரகத்தை நோக்கிப் பேரணி ஒன்றை நடத்த உள்ளது.

இது தொடர்பாகச் சங்கத்தின் தலைவர் பீ.பீநாயைக்கார அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

கடந்த இரு தசாப்தங்களுக்கும் மேலாக நாட்டில் தொடர்ந்து கொண்டிருக்கும் கொடுமையான போரினால் ஆயிரக்கணக்கான தமிழ், சிங்கள இளைஞர்கள் அநியாயமாகப் பலியாகியுள்ளனர். இதைவிடப் பெருமளவானவர்கள் இந்தப் போரினால் அங்கவீனமடைந்ததுடன் மேலும் பலர் காணாமலும்போயுள்ளனர்.

எனினும், இந்தப் போருக்கு இதுவரை முடிவு காணப்படவில்லை. இதனை முடிவுக்குக் கொண்டுவர மூன்றாம் தரப்பு தலையீடு அவசியம் என்பது அனைவராலும் உணரப்பட்டுள்ளது. இந்த முயற்சியில் இன்று நோர்வே அரசு ஈடுபட்டுள்ளது. இதற்காக அவர்களுக்கு நாம் நன்றி தெரிவிக்கிறோம்.

நோர்வேயின் இந்த முயற்சிக்கு ஆதரவு தெரிவித்து இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கொழும்பு 7 மஹாவலி நிலையத்திலிருந்து சமாதானப் பேரணி யொன்று நோர்வே தூதரகம் நோக்கிப் புறப்படவுள்ளது. அங்கு நோர்வேயின் முயற்சியைப் பாராட்டியும் அது தொடரவேண்டுமெனக் கோரியும் மகஜரொன்றும் கையளிக்கப்படவுள்ளது.

சமாதானத்தையும், மனிதாபிமானத்தையும் வரவேற்கும் அனைத்து மக்களுக்கும் இந்தப் பேரணியில் கலந்து கொள்வதன் மூலம் நாட்டில் விரைவில் அமைதியும் சமாதானமும் ஏற்படுவதற்கான எமது பங்களிப்பை வெளிப்படுத்த முடியும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பொது அறை வழங்கக் கோரி முகாமைத்துவ மாணவர் போராட்டம்

## தற்காலிக கொட்டகையும் அமைத்தனர்

யாழ்ப்பாணம்,டிசெ.11


யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீட மாணவர்களால் கடந்த வெள்ளியன்று விசித்திரமான எதிர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

முகாமைத்துவ பீட மாணவர்களுக்குப் பொது அறை வழங்கப்படாததற்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்கலைக்கழக வளாகத்துள் "றபர் சீற்" மூலம் தற்காலிக கொட்டகை ஒன்றை அமைத்து பொது அறை என்ற வாசகம் பொறித்த அட்டை ஒன்றையும் அதன்முன் கட்டி திறப்பு விழாக் கொண்டாடினர்.

இதனையடுத்து யாழ்.பல்கலைக்கழக அதிகாரிகள் அவசரமாகக் கூடி கலந்தாலோசித்தனர். அதனை அடுத்து கலைபீடம், முகாமைத்துவப் பீடம் மற்றும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆகியவற்றின் தலைவர்களையும் பல்கலைக்கழக அனைத்துப்பீட பீடாதிபதிகளையும் அழைத்துக் கூட்டம் ஒன்றை நடத்தினர்.

இந்தக்கூட்டத்தில் மாணவர்களது அன்றாடப் பிரச்சினைகளை தாம் ஏற்றுக்கொள்வதாகக் கூறிய நிர்வாகம் அவர்களது தேவைகளைத் தற்காலிகமாகப் பூர்த்தி செய்யும் வகையில் பொது அறை, கற்கும் அறை மற்றும் கன்ரீன் வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க இணக்கம் தெரிவித்தது.

கொழும்பு சென்றுள்ள துணைவேந்தர் யாழ்.திரும்பியதும் மாணவர்களது ஏனைய கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும் என்று நிர்வாகத்தினரால் உறுதி அளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. பின்னர் பிற்பகல் அளவில் கலைப்பீடம், முகாமைத்துவ பீட மாணவர்களுக்கு தனித் தனியான பொது அறைகள் வழங்கப்பட்டன. அதனையடுத்து மாணவர்களது போராட்டம் கைவிடப்பட்டது. (ம-6-5)



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் புத்தாயிரமாண்டு இல்லமெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. கனிஷ்ட பிரிவுச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட காசிப்பிள்ளை இல்லத்துக்கான கேடயத்தை பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் திருமதி லலிதா மகேந்திரன் வழங்கும் போது எடுக்கப்பட்ட படம். மாணவனுக்கு அருகே கல்லூரி விளையாட்டுப் பொறுப்பாசிரியர் ச.நிமலன் காணப்படுகிறார். இந்தப் போட்டியில் பிரதம விருந்தினராக கல்லூரியின் முன்னாள் அதிபர் இ.மகேந்திரன் கலந்து கொண்டார். (ஐ-3)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரி தளபாடங்கள் மீட்கப்பட்டன

நெல்லியடி,டிசெ.11

சாவகச்சேரி மருத்துவமனையில் இருந்து, இரண்டாம் கட்டமாக, தளபாடங்களும், ஊழியர்களின் உடைமைகளும் மீட்கப்பட்டுள்ளன.

சாவச்சேரி வைத்திய அதிகாரி டாக்டர் என். ஞானசுதன் தலைமையில், பென் தாதிய உத்தியோகத்தர் திருமதி இ.இராஜசேகரம், பொது சுகாதாரப் பரிசோதகர்களான தி. கிளின்டஸ், ந.சிவபாலன், காசநோய் வைத்தியசாலை எழுதுவினைஞர் தா.செல்வரட்ணம் ஆகியோர் கடந்த முதலாம் திகதி ஆஸ்பத்திரிப் பகுதிக்குச் சென்றிருந்தனர்.

யாழ்.பிராந்திய பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி செல்வி உமா - சிவபாத சுந்தரத்தின் ஏற்பாட்டில், திணைக்கள லொறிகள் இரண்டு அங்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

சாவகச்சேரி மருத்துவமனையில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த மரத்தளபாட வகைகளும், சிற்றூழியர் விடுதி, தாதிய உத்தியோகத்தர் விடுதிகளிலிருந்து ஊழியர்களின் உடைமைகளும், காச நோய் மருத்துவ நிலைய ஆவணங்களும் மீட்கப்பட்டன.

சாவகச்சேரி மருத்துவமனை வளவில் வெடிக்காத நிலையில் பல ஷெல்கள் காணப்பட்டதாகவும் -

அங்குள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும், காசநோய் மருத்துவமனையும் சேதம் அடைந்து காணப்பட்டதாகவும் -

சாவகச்சேரி வைத்திய அதிகாரி என்.ஞானசுதன் தெரிவித்தார்.(ஐ-109)

## குரங்கு கடித்து சிறுமி காயம்

நெல்லியடி,டிசெ.11

ரியூசனுக்குச் சென்று கொண்டிருந்த 5 வயதுச் சிறுமி, வழியில் குரங்கினால் கடியுண்டு காயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் துன்னாலை குடவத்தையில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த தேவராசா - சுவேக்கா(வயது 5) என்னும் சிறுமியே குரங்கினால் கடியுண்டு, முகத்திலும் கையிலும் காயமடைந்த நிலையில் மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (ஐ-109)

## கணிப்பீட்டு புள்ளிகளை ஒப்படைக்கவும்

வண்ணார்பண்ணை,டிசெ.11

மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயம், கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் நிரந்தரமாக கல்விகற்ற மாணவர்கள், இடம்பெயர்ந்து தற்போது கல்வி கற்கும் பாடசாலைகளில் தரம் 9க்குரிய தத்தமது கணிப்பீட்டு புள்ளிகளைப் பெற்று எதிர்வரும் புதன்கிழமை காலை 9மணிக்கு தற்போது இயங்கி வரும் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் ஒப்படைக்கும்படி அதிபர்கள் கேட்டுள்ளனர். (ஓ-5-74)

## திருட்டு

கடந்த ஒரு வாரகாலத்தில் வடமராட்சிப் பகுதியில் நான்கு ஆலயங்களில் இரவு வேளைகளில் உண்டியல்கள் உடைத்து பெருமளவு பணம் திருடப்பட்டிருப்பதாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் புகார் இடப்பட்டுள்ளது. (ஐ-109)



வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் நினைவு தினமும் அண்மையில் கல்லூரி அதிபர் ச.இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றன. பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஐ-135)

(படம்:- சண்டிலிப்பாய் செய்தியாளர் நா.மா.கந்தசாமி)

# புலிகள் மீதான தடையை நீக்க அரசு தயாராகிறது

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் இடம்பெறும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக விடுதலைப் புலிகள் மீது அரசினால் விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவது தொடர்பாக அரசு ஆராய்ந்து வருவதாக சுயாதீன செய்தி வட்டாரங்களை மேற்கோள்காட்டி சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்காமலேயே பேச்சுக்களை ஆரம்பித்து, அதன் மூலம் பெறப்படும் முடிவுகளை அமுல்படுத்துவதில் சட்ட ரீதியான பிரச்சினைகள் தோன்றலாம். இதைக் கருத்திற் கொண்டு அரசு இந்த முயற்சியை மேற்கொண்டு வருகிறது.

இந்த விடயம் தொடர்பாக நோர்வே பிரதிநிதிகளின் ஊடாக அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்கனவே கருத்துக்கள் பரிமாறப்பட்டுள்ளன.

இவ்வாறு அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-20)

# அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணை சட்ட வாதங்களின் பின் நிறைவேறியது

அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒருமாத காலத்திற்கு நீடிக்கும் பிரேரணை தொடர்பாக நாடாளுமன்றத்தில் சட்ட விவாதம் கடந்த வெள்ளியன்று நடைபெற்றது.

இந்தப் பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றிய சபை முதல்வர் ரிச்சர்ட்பத்திரான,"ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இந்தப்பிரேரணையில் கடந்த 4ஆம் திகதி கொழும்பில் கைச்சாத்திட்டார் என்று தெரிவித்தார்.

"ஜனாதிபதி லண்டனில் இருப்பதாக அரசசார்புப்பத்திரிகை படத்துடன் செய்தி வெளியிடுகின்றது. அப்படியானால் அவர் எப்படி கொழும்பில் கைச்சாத்திட முடியும்?" என்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் குரல் எழுப்பினார்கள்.

சட்ட நீடிப்புக்கு வாக்களிப்பு நடத்த முடியாது என்று அவர்கள் வாதிட்டனர்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பேசுகையில், "இந்தப் பிரேரணை சட்டவிரோதமானது. எனவே இந்தப்பிரேரணையின் உண்மைத்தன்மையை அறிய இந்தப் பிரேரணையை சட்டமா அதிபருக்கு அனுப்ப வேண்டும். அதன் பின்னர் நீதிமன்றத்துக்கு அனுப்பவேண்டும்" என்று கோரினார்.

இதற்குப்பதில் அளித்த பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, எதிர்க்கட்சித்தலைவர்கூறியது போன்று இந்தப் பிரேரணை தொடர்பான விவகாரத்தை சட்டமாஅதிபருக்கு அனுப்பலாம். ஆனால் இப்போது பிரேரணை மீது வாக்கெடுப்பை நடத்துவோம் என்று கூறினார்.

இதை எதிர்க்கட்சித்தலைவரும் ஏற்றுக்கொண்டதை அடுத்து வாக்கெடுப்பு இடம்பெற்றது.

பிரேரணைக்கு ஆதரவாக115 வாக்குகளும் எதிராக 10 வாக்குகளும் அளிக்கப்பட்டன. ஐ.தே.க. வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. தமிழர் விடுதலைக்கூட்டணி, ஜே.வி.பி., ரெலோ, தமிழ்க் காங்கிரஸ், சிஹல உறுமய ஆகியவற்றின் உறுப்பினர்கள் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தனர். ஈ.பி.டி.பி. அரசுடன் சேர்ந்து பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தது. (இ-3)

# அரசு சமாதானம் பற்றிப் பேசும்போது பாரிய யுத்தத்துக்கும் தயாராகிறது!

## விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை அரசியல் பிரிவு அறிக்கை

மட்டக்களப்பு,டிசெ.11

அரசு பேச்சளவில் என்னதான் சமாதானம் பற்றிப் பேசினாலும், சமாதானத்தைக் கடைப்பிடிப்பததாகக் காட்டிக்கொண்டாலும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான பாரிய யுத்தம் ஒன்றுக்குத் தயாராகி வருகிறது.

இதற்கான நடவடிக்கைகளை முழுமூரமாக்கியுள்ளது.

மேற்கண்டவாறு விடுதலைப்புலிகளின் மட்டு - அம்பாறை அரசியற் பிரிவு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரசு தீவிரப்படுத்த விரும்பும் இந்த யுத்தத்தின் விளைவுகளை நேரடியாகச் சந்திப்பவர்கள் படையினர். அதனால் என்றுமில்லாதவாறு இவர்கள் படையிலிருந்து தப்பியோடத் தொடங்கியுள்ளனர்.

இராணுவப் பரம்பலில் அவசர அவசரமாகத் தற்போது மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு யுத்த முனைகளில் படையினர் குவிக்கப்படுகின்றனர்.

யுத்தத்தின் கொடூரத்தைத் தெரிந்த படையினர் இதனால் தப்பி ஓடுகின்றனர்.

பொலன்னறுவை, மாதுறு ஓயா இராணுவமுகாமிலிருந்து கடந்த 27 ஆம் திகதி மாத்திரம் 204 படையினர் தப்பியோடியுள்ளனர்.

இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-8)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

திக்கம் மத்திய சனசமூக நிலையக் காப்பாளரும், திக்கம் (அல்வாய் மேற்கு) கிராம அபிவிருத்திச் சங்கக் காப்பாளரும், பொலிகண்டி கந்தவன தேவஸ்தான திருப்பணிச்சபை செயலாளரும், இளைப்பாறிய தலைமைப்பீட சிரேஷ்ட தொழில்நுட்ப உதவியாளருமாகிய

**திரு.கதிர்காமத்தம்பி தங்கராஜா**

அவர்கள்

அரசமைப்பு விவகார அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டு 29-11-2000 அன்று யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்தமையை இட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

* திக்கம் மத்திய சனசமூகநிலையம்,
* திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம்,
* திக்கம் (அல்வாய் மேற்கு) கிராம அபிவிருத்திச் சங்கம்.

(C/14221)

## சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்,சாவகச்சேரி

பொதுச்சபைப் பிரதிநிதிகளுக்கான அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பாக தங்களுடன் கலந்தாலோசிக்க இருப்பதாலும், பொதுக் கூட்டம் ஒன்றைக்கூட்ட வேண்டியுள்ளதாலும், தங்களின் தற்போதைய முகவரியினை தங்கள் வசிப்பிடத்திற்கு அண்மையிலுள்ள எமது சங்கக் கிளைகளில் முகாமையாளரிடம் வழங்கும்படியும் அல்லது சங்கத் தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பியுதவுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

*செ.சுப்பிரமணியம்*
*தலைவர்.*

கொடிகாமம் வீதி,
நெல்லியடி.

*சு.சுந்தரலிங்கம்*
*செயலாளர்*

(14230)


## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்மா,வாதநோய்கள், வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலை, கால் அவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப் பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு, மூல வியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர்.

**சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்**

**வேலணை**

**வைத்திய கலாநிதி**

**சி.இராசரத்தினம்**

121, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

தொலைபேசி எண்: **2459**

(81504)


## 2ஆவது பிறந்த தின வாழ்த்து



மறவன்புலோ- மேற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த

**ஜனார்த்தனன் - காந்திமதி**

**தம்பதிகளின்**

*அருந்தவப் புதல்வி*

**செல்வி ஜ.ஜதுர்சனா(ஜனனி)**

தனது இரண்டாவது பிறந்த தினத்தை இன்று (11.12.2000) திங்கட்கிழமை தற்காலிக முகவரியான சித்தன்கேணியிலுள்ள இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். ஜனனிக்குட்டியை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா , அம்மம்மா, அன்ரா, அப்பப்பா, அப்பம்மா , அத்தை, சித்தா மற்றும் உற்றார், உறவினர் யாபேரும் துர்க்கை அம்மன் அருளுடன் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

*சித்தன்கேணி.* (C/14208)

இ.ஜனார்த்தனன்.
(அப்பா)

HAPPY BIRTHDAY

உ
கணபதி துணை

## ஆனைக்கோட்டை - திருவருள்மிகு கரைப்பிரான் ஆதி விநாயகர் தேவஸ்தானம்

விநாயக விரத இலக்ஷநாம அர்ச்சனை - விஞ்ஞாபனம்

ஆரம்பம் : 12.12.2000 - செவ்வாய் நிறைவு : 31.12.2000 - ஞாயிறு

மேற்படி நாள்களில் தினமும்

| | | |
|---|---|---|
| காலை | 10.00 மணி | - அபிஷேகம் |
| | 10.30 மணி | - பூஜை |
| | 10.45 மணி | - புராணப் படிப்பு |
| | 11.15 மணி | - பஞ்சமுக அர்ச்சனை |
| | 12.30 மணி | - திருவருட் பிரசாதம் வழங்கல் நிறைவு. |

*சர்வ போதகம் :-* பிரம்மஸ்ரீ தா.மஹாதேவக் குருக்கள்.
(அதிபர் தர்ம சாஸ்தா குருகுலம் - இணுவில்)

"அடியவர்கள் வருக, ஐங்கரன் அருள் பெறுக"

இறை திருத்தொண்டில்
சோம.சிவகுமாரக் குருக்கள்.

(81498)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**சின்னத்தம்பி ஆறுமுகம்பிள்ளை**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16-05-1921 | 12-11-2000 |

பாசமகள் போல் அரவணைத்து வளர்த்திட்டீர் ஐயா!
நேசமாய்க் கதைத்து எம்மை மகிழவைப்பீர் ஐயா!
பாரினிலே உங்களைப் போல் யாருமில்லை ஐயா!
வீணையிலே வித்தகராய்,
ஊர், உறவை மதிக்கும் உத்தமராய்,
அறிவோடு அறம் வளர்க்கும் நற்குருவாய்,
முருகனின் அருள் தேடி வணங்கும் பக்தராய்,
மொத்தத்தில் மனிதருள் மாணிக்கமாய்
நீங்கள் வாழ்ந்தீர்களே அத்தான்!

முழுமதியில் உங்கள் முகம் வாடியதேன்?
மூடியகண் திறப்பதற்கு மனம்தான் வரவில்லையோ?
எம் அக்காவைப்பிரிந்து நீங்கள் அவசரமாய்ச் சென்றதெங்கே?
பூவோடு பொட்டையும் மட்டுமா கொண்டு சென்றீர்?
உம் இனிய துணைவியின் உள்ளத்தையும் அல்லவோ
கொண்டு சென்றீர்
பிள்ளைகள் கதறி அழும் சத்தமும் கேட்கவில்லையோ?
நீங்கள் நோயுற்ற வேளையிலே நலமாக வேண்டும் என்று
பிரார்த்தித்தோமே
எங்கள் பிரார்த்தனையை முருகன் செவிசாய்க்கவில்லையே
எமையெல்லாம் தவிக்கவிட்டு நீங்கள் மறைந்ததென்ன
மாயம் ஐயா.
சொந்தங்களின் சோகத்தில் சொர்க்கத்தை நாடினீர்களா?
கண்களிலே கண்ணீர் கலங்குகிறோம் நாமிங்கு.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
திருமதி சிவமலர் கந்தசாமி
(மைத்துனி)
மற்றும் குடும்பத்தினர்.

*111,இராசாவின் தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.* (81510)


## இதோ வெளிவந்து விட்டது!

## தீபம் பஞ்சாங்கக் கலண்டர்

விற்பனையாகிக் கொண்டு இருக்கின்றது.
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்:-

**சிவன் மாளிகை லிமிட்டெட்**

166, கே.கே.எஸ்.றோட்,
யாழ்ப்பாணம்.

*தொலைபேசி:* **2996**

(81515)


## கண்ணீர் அஞ்சலி

கொக்குவில் கிழக்கு விவசாய சம்மேளன பொருளாளரும், நல்லூர் கமநல கேந்திர குழுவின் நிர்வாகசபை உறுப்பினரும், விவசாயப் பெருமக்களின் முன்னோடியாகத் திகழ்ந்தவருமான

**திரு.சி.அருணகிரிநாதன்**

அவர்கள் 09-12-2000 அன்று சிவபதமடைந்த செய்தி அறிந்து அதிர்ச்சியும் துயரும் அடைந்ததுடன் அமரரின் குடும்பத்தாருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உதவி ஆணையாளரும், உத்தியோகத்தர்களும்,
கமநல சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்.,
உத்தியோகத்தர்களும், நிர்வாகக்குழு உறுப்பினர்களும்,
கமநல கேந்திர நிலையம், நல்லூர்.

(18517)

நூலகம் யாழ்ப்பாணம்

# தமிழக அரசுக்குத் தெரியாமலேயே ஈழவேந்தன் நாடுகடத்தப்பட்டாராம்!

சென்னை,டிசெ.11

விடுதலைப்புலிகளின் ஆதரவாளரும், நீண்டகாலம் தமிழகத்தில் வாழ்ந்தவருமான ஈழவேந்தனை கொழும்புக்கு நாடுகடத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தமிழக அரசுக்குத் தெரியாமல் இரகசியமாகவே மேற்கொள்ளப்பட்டன என்று தமிழக அரசு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்தது.

கடந்த திங்களன்று ஈழவேந்தன் தமிழ்நாட்டில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து அதிகாரிகளால் பலவந்தமாக அழைத்துச் செல்லப்பட்டு விமானத்தில் ஏற்றி கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது தெரிந்ததே.

இதே வேளை -

தமிழ் சான்றோர் பேரவை, பெரியார் திராவிடர் கழகம் என்பவை ஈழவேந்தன் நாடு கடத்தப்பட்டதற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

சேலத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசிய தமிழ் சான்றோர் பேரவை நிறுவுநர் ந.அருணாசலம் மற்றும் ஒருங்கிணைப்பாளர் தமிழண்ணல் ஆகியோர் இந்த நாடு கடத்தலுக்குத் தமது கண்டனத்தைத் தெரிவித்ததுடன் மாநில அரசுக்குத் தெரியாமல் இந்தச் சம்பவம் இடம் பெற்றிருக்குமா என்றும் கேள்வி எழுப்பினர். ஈழவேந்தனின் நாடு கடத்தலுக்கு தமிழகத்தின் எந்தக் கட்சியும் இதுவரை கண்டனம் தெரிவிக்காதது குறித்தும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.

பெரியார்திராவிடர்கழகப் பொதுச் செயலர் விடுதலை கா.இராஜேந்திரனும் ஈழவேந்தனின் நாடு கடத்தலைக் கண்டித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

(ம-6)

# போஷாக்குக் குறைபாட்டால் இடம்பெயர்ந்த சிறுவர் பாதிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.11

யுத்தச் சூழ்நிலையால் இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்கள் போஷாக்குக் குறைபாட்டினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தலைவர் பி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்றுமுன்தினம் இணையம் ஏற்பாடு செய்திருந்த 'இடம்பெயர்ந்தோர் தொடர்பான வழிகாட்டு விதிகள்' குறித்த கலந்துரையாடலில் அவர் இதனைக்கூறினார்.

சட்டவல்லுநர்கள் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் ஆகியோர் இதில் பங்குபற்றினர். இந்தக் கலந்துரையாடலில் பி.விக்னேஸ்வரன் முடிவுரையாற்றுகையில் -

மனித உரிமை மீறல் நிகழ்வுகளை ஆவணப்படுத்தும் நடவடிக்கைகளை இணையம் மேற்கொள்ளும் என்றும் -

யாழ்ப்பாணத்தில் உயர்நீதிமன்றம் அமைக்கும் முயற்சிக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவுள்ளதாகவும் -

தெரிவித்தார்.

உலக வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள நிவாரண, புனரமைப்புப் பணிகளுக்கான திட்டங்களைத் தயாரிக்க உதவியாக, மனித நேய அமைப்புக்களின் இணையம் கேட்டுக்கொண்டதற்கிணங்க இக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## ஜப்பானிய பிரஜைகளுக்கு எச்சரிக்கை

கொழும்பு,டிசெ.11

இலங்கைக்கு விஜயம் செய்யும் ஜப்பானியப் பிரஜைகள் விழிப்புடன் நடந்துகொள்ள வேண்டும் என்று ஜப்பானிய அரசு தனது பிரஜைகளை எச்சரித்துள்ளது.

இலங்கைக்கு மேற்கொள்ளும் பயணங்களை குறைத்துக் கொள்ளுமாறும் தனது பிரஜைகளை ஜப்பான் அறிவுறுத்தியுள்ளது. (ஐ-20)

## காயமடைந்த டாக்டர் மரணம்

மட்டக்களப்பு சத்துருக்கொண்டானில் கடந்த புதன்கிழமை இடம் பெற்ற கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதலில் காயமடைந்து கொழும்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த டாக்டர் டியூக் அருட் பிரகாசம் (வயது37) கடந்த வெள்ளியன்று அங்கு உயிரிழந்தார்.

படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார். கடந்த வெள்ளியன்று காலை 10.30 மணியளவில் அவர் உயிரிந்ததாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (ம)

NEW SCIENCE HALL
யாழ்ப்பாணம்
PHYSICS
mr.சோதிலிங்கம் B.Sc.
2001 A/L DAY CLASS
தூரிதமீட்டல்
❖ HEAT ❖
ஆரம்பம்:-
12.12.2000 செவ்வாய்
காலை 7.00 மணி.
(81534)



மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பயணிகள் பஸ் ஒன்று கடந்த புதனன்று சத்துருக்கொண்டான் பகுதியில் கிளைமோர் கண்ணி வெடித்தாக்குதலுக்கு இலக்கானது.

அந்த பஸ் வீதிக்கு அப்பால் வெள்ள நீரில் தூக்கி வீசப்பட்டுக் கிடப்பதை படத்தில் காணலாம். (ஐ)

# குருநகர்ப் பகுதி மக்கள் வீடுகளுக்குத் திரும்புகின்றனர்

குருநகர்,டிசெ.11

குருநகர் பகுதியில் மக்கள் மீளக்குடியேறி வருகின்றனர். மக்கள் இருப்பிடங்களுக்குத் திரும்புவதை அடுத்து வர்த்தக நிறுவனங்களும் திறக்கப்பட்டுள்ளன. பூட்டப்பட்ட நிலையிலுள்ள யாழ். ப.நோ.கூ. சங்கக் கிளைகளைத் திறக்க யாழ்.ப.நோ.கூ. சங்கம் இதுவரை எதுவித நடவடிக்கையையும் எடுக்கவில்லையென மக்கள் தெரிவித்தனர்.

மீளக்குடியேறிய மக்கள் பங்கீட்டு அட்டைகளுக்கான பொருள்களை யாழ். காங்கேசன்துறை வீதியிலுள்ள யாழ்.ப.நோ.கூ.சங்க விஷேட விற்பனை நிலையத்திலேயே சென்று பெற்று வருகின்றனர். (ஐ-51)

## கண்ணீர் அஞ்சலி

கொக்குவில் கிழக்கு விவசாய சம்மேளன முன்னாள் தலைவரும், தற்போதைய பொருளாளரும், நல்லூர் கமநல கேந்திர குழுவின் நிர்வாக சபை உறுப்பினரும், கொக்குவில் கிழக்குப் பகுதியில் விவசாய மன்னனுமாகிய

அமரர்
**சிவசுப்பிரமணியம் அருணகிரிநாதன்**
(ஓய்வுபெற்ற m.s.o. - தபால் திணைக்களம் )

அவர்கள் 08.12.2000 அன்று சிவபதமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*கொக்குவில் கிழக்கு.*
*கொக்குவில்.* (81536)

**- விவசாய சம்மேளனம்.**

# 13ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
18-11-1936

மறைவு
04-12-1987

**திதி:11-12-2000**

## அமரர் இராசதுரை பஞ்சாட்சரம்

(ஸ்தாபகர், அருள்முருகன் நகை அகம்)

*பண்பிலே தெய்வமாய் பாரினில் வாழ்ந்தவரே*
*அன்புக்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்தவரே*
*ஆண்டுகள் பதின்மூன்று ஓடி மறைந்தாலும்*
*அகத்தனிலே உம் நினைவு என்றும் நெஞ்சினிலே*
*நீங்கள் இம் மண்ணுலகை விட்டுப் பிரிந்தாலும்*
*உங்கள் அன்பும் வழிகாட்டலும் என்றும் எம் நினைவிலே!*

**என்றும் உங்கள் நினைவுகளுடன்**
**அன்பு மனைவி,**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

*483,கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*சாரங்கா நகை மாளிகை,*
*177/4,கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*பெருங்குளம் வீதி,*
*சாவகச்சேரி.* (சி14240)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனை

குறுகிய காலத்தில் காய்க்கக் கூடிய தென்னங்கன்றுகள் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:- S.M. சுப்பிரமணியம் (பீற்றூட் மணியம்), நிதியம்பனை, மல்லாகம். (C/14215)

சாளி மோட்டார் சைக்கிள், லுமாலா ஆண்கள் துவிச்சக்கர வண்டி, நஷனல் பனசொனிக் டெக், ரேடியோ, BOX FAN மற்றும் ஏனைய பொருள்களும விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- இல. 34/7,செட்டித் தெரு, நல்லூர். (81458)

மூவர் தேவாரம்,திருவாசகம், திருமந்திரம், பட்டினத்தார் பாடல், தாயுமானவர் பாடல், திருவருட்பா, நற்சிந்தனை இன்னும் பல பெரியோர்கள் அருளிய நல்லறிவு நூல்கள் இருக்கின்றன. தொடர்பு:- 135, சிவன்கோயில் முன்பாக, நல்லூர், யாழ்ப்பாணம். நேரம்: மாலை 2.00 - 6.00 வரை. (81513)

### தவறிவிட்டது

ந.சிவகுமார் ஆகிய எனது கைச் சங்கிலி(பவுண்) நாச்சிமார் கோயிலடிக்கும் யாழ்.ஆஸ்பத்திரிக்கும் இடையில் 30-11-2000 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ந.சிவா இல.556, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C/14229)

கச்சாய் தெற்கு, கொடிகாமம் என்னும் முகவரியை உடைய செல்லத்துரை சிவசோதி என்பவரது விசேட அ.அ. (இல.091002869) 09-12-2000 அன்று கொக்குவிலுக்கும் மருதனார்மடத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இராசம் கொமினிக்கேசன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்.என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (81537)

### MATHS

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் தரம் 6 - O/L வரையான மாணவர்களுக்கு தனியாகவோ சிறு குழுக்களாகவோ கணித பாடம் வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும். தொடர்பு: விளம்பர இல.1155, மே/பா உதயன். (81516)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 33 வயதுடைய (நட்சத்திரம் பூரம் 3ஆம் பாதம்) இங்கிலாந்தில் பொறியியலாளர் தகைமையுடன் தனியார் நிறுவனமொன்றில் உதவி முகாமையாளராகக் கடமையாற்றும் மணமகனுக்கு படித்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். விள. இல. 1156, மே/பா உதயன். (81535)

### DISSERTATION BINIDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள் பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக் கொடுக்கப்படும்.(இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா 350) தொடர்பு: பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி இல.3081. (C/14241)

### இலக்கியக் கட்டுரைகள்

க.பொ.த. சாதாரண, உயர்தர மாணவர்கள் தமிழ் மொழியும் தமிழ் இலக்கியமும் கற்பதற்கு உதவக் கூடிய 38 கட்டுரைகளும், 325 நாடகங்களும், 50 சிறுகதைகளும் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் இலக்கிய விமர்சன நூல். (81537)

**கணக்கீடு**

**A/L 2001 (DAY)**

**திரு. S.D.J.சுதர்சன்**

**ஆரம்பம் : 13-12-2000**
புதன் 8மணி (ப.நே)

◆ **அனுமதிகள் வழங்கப்படுகின்றன.**

**புதிய உயர் கல்லூரி,**
ஆரியகுளம் சந்தி, யாழ்.
(81542)

# சபை அமர்வுகளில் எம்.பிக்கள் தவறாது கலந்துகொள்ள வேண்டும்

## ரணில் அறிவுறுத்து

கொழும்பு,டிசெ.11


நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ளாத ஐ.தே.க. எம்.பிக்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமர்வுகளில் ஐ.தே.க. எம்.பிக்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ள வேண்டும். தொடர்ந்து அமர்வுகள் நிறைவு பெறும் வரை நாடாளுமன்றை விட்டு வெளியேறக்கூடாது. இந்தப் பழக்கத்தை வழக்கத்தில் கொள்ள வேண்டும் - என்றும் அவர் அறிவுறுத்தினார். (ஐ-8-20)

## 31ம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் மலர்வு
16.05.1921



இயற்கையுடன் சங்கமம்
12.11.2000

அமரர்
### சின்னத்தம்பி ஆறுமுகம்பிள்ளை

உறவுகள் போனதங்கே
உருவமே இல்லாமல் - இனி இரவுகள் போகுமிங்கே
உங்கள் நினைவுகள் உறங்காமல்
நேற்றடித்த காற்றா - நீங்கள் நாளையும் வருவதற்கு
ஊற்றெடுத்த உயிரப்பா - சக உதரத்தின் உதிரத்தில்
வாய்விட்டழவும் வசதியின்றி உருகுதப்பா உணர்விங்கு
ஏங்குதப்பா உங்கள் உறவுகள்
எங்கே நீங்கள் ....?
நாட்கள் முப்பத்தி ஒன்று நடைபோட்ட போதும்
விழித்திரையில் உங்கள் விம்பம் நினைவுகளை எப்போதும் நிழலாக்கும்

இன்று (11.12.2000) திங்கட்கிழமை 11.00மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

ஆ.சத்தியமூர்த்தி
(மக்கள்வங்கி, சுன்னாகம்)
251/2 பருத்தித்துறை வீதி,
நல்லூர்(சங்கிலியன் தோப்பு முன்)
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
உறவினர்கள்:
நடராசா குடும்பத்தினர்
நாகராசா(தம்பி) குடும்பத்தினர்
Dr.கந்தசாமி குடும்பத்தினர்
இராமச்சந்திரன் குடும்பத்தினர்
ஏகாம்பரம் குடும்பத்தினர்

**B I T S M A N S**

# BITSMANS

**கல்வி நிலையம், மானிப்பாய்.**

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**

**BY : M.A.HARI**

**ஆரம்பம்:- 12-12-2000 செவ்வாய் 7.00 a.m**
பல்கலைக்கழக புகுமுக மாணவர்களும் ஏனைய மாணவர்களுக்குமான விசேட வகுப்பு. (81546)

# JAFFNA TECHNICAL INSTITUTE

## புலமைப்பரிசில் திட்டம் 2001

யாழ். மாவட்டத்தில் கடந்த 21 வருடங்களாகப் பல்வேறு துறைகளில் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு சிறப்பாக பயிற்சியளித்துவரும் எமது நிறுவனத்தில் மாணவர்களின் கணனி அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் இரண்டாவது தடவையாக கணனிப் பயிற்சி நெறிக்கு 2001 ஆம் ஆண்டில் போட்டிப் பரீட்சை (பொது அறிவு, நுண்அறிவு) மூலம் புலமைப் பரிசில் வழங்கவுள்ளோம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

விண்ணப்பப் படிவங்களை கீழ்க்காணும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

- பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்.
- மகாத்மா புத்தகசாலை - திருநெல்வேலி.
- ஞானம் புத்தகசாலை - K.K.S.றோட் (நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.)
- நாயகபாலன் புத்தகசாலை - மானிப்பாய்.
- ஜீவா ஸ்ரோர்ஸ் - மல்லாகம்.
- மொடோன் ஸ்ரோர்ஸ் - நெல்லியடி.
- ராஜன் எலக்ரோனிக்ஸ் - அச்சுவேலி.

**விண்ணப்ப முடிவு திகதி 15.12.2000**

J.T.I
No.07, PALALY ROAD,
JAFFNA,
(இலுப்பையடிச் சந்தி அருகில்)

**- DIRECTOR.**

(C/14231)

# குருநகர் வர்த்தக சங்கம்

## அறிவித்தல்

சகல அங்கத்தவர்களும் எதிர்வரும் 12,13,14 ஆம் (செவ்வாய், புதன், வியாழன்) திகதிகளில் எமது அலுவலகத்தில் வந்து உங்கள் பெயர் விவரங்களைப் பதியுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குருநகர் பகுதியில் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கான இடர்க்காலக் கொடுப்பனவு விடயம் சம்பந்தமானது.

அலுவலக நேரம்: காலை 9.00 - 12.00

*குருநகர் வர்த்தகர் சங்கம்,*
*11,குருநகர் சந்தை,*
*குருநகர்,*
*யாழ்ப்பாணம்.*

**தலைவர், செயலாளர்.**

(81543)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**யாழ்.ப.நோ.கூ.சங்கப் பணியாளர்**

**திரு. சூ. ஜெயசிங்கம்**

அவர்களின் 35 வருட கலைச்சேவையை கௌரவித்து யாழ்.திருமறைக் கலாமன்றம் அவருக்கு பொன்னாடை போர்த்தி **'கலைக்குரல்'** என்ற பட்டம் வழங்கியதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றோம். அவருடைய கலைச்சேவை மேலும் தொடர இறைவனை வேண்டுகின்றோம்.

பாராட்டுவோர்:
யாழ்.ப.நோ.கூ.சங்கப் பணியாளர்களாகிய
- ★ சி.சிவாஸ்கரன்
- ★ பா.நந்தகுமார்
- ★ எஸ்.ரவி
- ★ வி.சுந்தரமூர்த்தி (சங்கப் பாதுகாப்பு உத்தியோகத்தர்)
- ★ பு.மயூரன்

(C/14242)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா இராமநாதன்

(முன்னாள் அதிபர், மரணவிசாரணை அதிகாரி, நெடுந்தீவு)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், வளன்புரத்தை வதிவிடமாகவும் கொண்ட க.இராமநாதன் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அ.கந்தையா(பொலிஸ் சார்ஜன்ட்) - நாகமுத்து ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மயில்வாகனத்தின் அன்புச் சகோதரனும், ஞானப்பூவின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், காலஞ்சென்ற சின்னப்புநாயகம் (அதிபர்), செபரட்ணம் (அஞ்சல் பரிசோதகர்) மற்றும் வித்துவான் அடைக்கலமுத்து (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அ.புஸ்பவதிB.Sc. (ஓய்வுபெற்ற அதிபர்) சீவரத்தினம் (முன்னாள் தபால் அதிபர், கனடா), செரூபிம், பாக்கியலீலா M.Sc(ஆஸ்திரேலியா), ஜெயசிங்கம் (சட்டத்தரணி), ஜெயராஜா (ஆஸ்திரேலியா), ஜெயசீலன்B.Sc. (கனடா), காலஞ்சென்ற ஜெயபாலன் (நிர்வாக அதிகாரி, நெ.ச.சபை), பத்மராணி (துரையப்பா ம.வி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற P.M.J.அன்ரனி B.Sc. (உதவிக் கல்விப் பணிப்பாளர்) மற்றும் M.R.I. செரூபிம் (பரிஸ்டர் - ஆஸ்திரேலியா), இராஜேஸ்வரி, நிர்மலாதேவி (ஆஸ்திரேலியா), இரட்ணேஸ்வரி (யாழ் உ.அ.அதிபர் பணிமனை), குணசீலி (கனடா), குணாளன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பிராங்கோ (கனடா), நாளினி (ஆசிரியர் கலாசாலை), நிராஞ்சன்(ஆசிரியர் கலாசாலை), கறோளினி (யாழ். பல்கலைக்கழகம்), கனடாவில் உள்ள யூட்சன், பட்சன், சஜி, Dr.அஞ்சலி (ஆஸ்திரேலியா), துஷ்யந்தன் B.Sc. (D.C.S., கொழும்பு), அஞ்சனா (யாழ். பல்கலைக்கழகம்), கீதனா (தொழில்நுட்பக் கல்லூரி), ஆஸ்திரேலியாவில் உள்ள நிரஞ்சினி, ரஜீவன், சஜ்சீவன், சாந்திபூசன் (கனடா), மேனகா, ஜனித்தா, (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), துஷி (கனடா), மன்மதன், சோபனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று 11.12.2000 பி.ப 3.30 மணியளவில் நெடுந்தீவு கிழக்கு சேமக்காலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*13ஆம் வட்டாரம்,*
*நெடுந்தீவு.*

(81544)

தகவல்:-
இரா.ஜெயசிங்கம்
(சட்டத்தரணி - மகன்)

## திருமதி கார்த்திகேசு தங்கம்மா

(நவாலிச் சந்தை வியாபாரி)

நவாலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கார்த்திகேசு தங்கம்மா நேற்று 10.12.2000 காலமானார்.

இவர் காலஞ்சென்ற கார்த்திகேசுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, நாகலிங்கம், சண்முகம், நமசிவாயம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சண்முகநாதன், நடேசபிள்ளை, மகேந்திரன், விமலராணி, ஜெயராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற அல்லிராஜாவின் அன்பு மாமியாரும், தமிழ்ச் செல்வன், ஜனார்த்தனன், கேதீஸ்வரன், பிரதீபன், தயாளன், சகோதசன், கஜேந்திரன், யோகேஸ்வரி, ஜெயவதனி, சுரேக்கா, சிவப்பிரியா, ரேணுகா, தயாளினி, யாழினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 11.12.2000 காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*சங்கையான் ஒழுங்கை,*
*சின்னப்பா வீதி,*
*நவாலி கிழக்கு, மானிப்பாய்.*

(81545)

தகவல்:
ஜெயராணி
(மகள்)

...நூலகம் யாழ்ப்பாணம்

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமரான

# ஷெரீப் சிறையிலிருந்து விடுதலை; சவூதி சென்று வாழவும் அனுமதி!

## இராணுவ அரசு வழங்கியது

இஸ்லாமாபாத், டிசெம்பர் 11

**பாகிஸ்தானில் முன்னாள் பிரதமர் நவாஸ்ஷெரீப் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு சவூதி அரேபியாவுக்குக் குடும்பத்துடன் சென்று தங்க இராணுவ அரசு அனுமதியளித்துள்ளது.**

நவாஸ்ஷெரீப் பதவியில் இருந்த போது, இராணுவப் புரட்சி மேற்கொண்ட அப்போதைய இராணுவத் தளபதியும், தற்போதைய ஆட்சியாளருமான, பர்வேஷ் முஷாரப் பயணம் செய்த விமானத்தை தரையிறக்குவதைத் தடுக்கும்படி உத்தரவு பிறப்பித்ததாகவும் —

இதன் மூலம் விமானத்தில் உள்ளவர்களைக் கொல்ல முயற்சித்ததாகவும் ஷெரீப் மீது குற்றஞ்சாட்டி இராணுவ அரசு வழக்குத் தொடர்ந்தது.

இந்த வழக்கிலும், ஷெரீப் மீதான ஊழல் வழக்குகளிலும் அவருக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு சிறைவாசம் அனுபவித்து வந்தார்.

தற்போது பாகிஸ்தான் ஜனாதிபதி ரபீக் தரார் தமது அரசியல் சாசன அதிகாரத்தைப் பயன்படுத்தி ஷெரீபின் தண்டனையை அகற்றியுள்ளார்.

நாடு மற்றும் மக்களின் நலன் கருதியே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகக் கூறியுள்ள இராணுவஅரசு ஷெரீப் சவூதி அரேபியாவுக்கு விமானம் மூலம் குடும்பத்தாருடன் செல்ல அனுமதியளித்துள்ளது.

ஷெரீப் குடும்பத்தாருக்கு சவூதி அரேபிய அரசு 'விஸா' வழங்கியுள்ளது

நாட்டை விட்டுச்செல்வதையடுத்து, நவாஸ்ஷெரீப் தனது பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சிக்கு ஜாவித் கஸ்மி என்பவரைத் தலைவராக நியமித்துள்ளார்.

இதேசமயம் —

இராணுவ ஆட்சியாளருடன் ஷெரீப் பேசிய பேர உடன்பாட்டினாலேயே அவர் விடுவிக்கப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசியலைக் கைவிட்டு ஒதுங்குவதாக ஷெரீப் வாக்குறுதி அளித்ததாலேயே, அவர் நாடு கடந்து வாழ அனுமதிக்கப்பட்டதாக அந்தத் தகவல்கள் கூறுகின்றன



கடைசியாகக் கிடைத்த செய்திகளின்படி நவாஸ் ஷெரீபும் குடும்பத்ினரும் சவூதி அரேபியா சென்றடைந்ததாகத் தெரியவந்துள்ளது.

(ஒ-5-6)

## எகுட் பராக் பதவி விலகினார்

டெல் அவிவ், டிசெ. 11

இஸ்ரேலியப் பிரதமர் எகுட்பராக் பதவி விலகுவதாக அறிவித்துள்ளார்.

புதிய பிரதமரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் 60 நாள்களுக்குள் நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இஸ்ரேலியச் சட்டத்தின்படி நேரடித் தேர்தல் மூலம் பிரதமர் தேர்ந்தெடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

(ஒ)

## சீனாவிடம் வாங்கிய கடன் ரத்து

பெய்ஜிங், டிசெ. 11

ஆபிரிக்க நாடுகள் சில சீனாவிடம் வாங்கிய 1000 கோடி யென்கள் கடனை மீள அறவிடப் போவதில்லை என்று சீன அரசு அறிவித்துள்ளது.

ஏழை நாடுகளின் கடன் சுமைகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்போவதாக ஐ.நாவிடம் சீனா அளித்த வாக்குறுதியின் படி இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என சீனப்பிரதமர் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். [ஒ–7]

தஞ்சமடைந்தோருக்கு எதிரான

## வலதுசாரிக் கட்சியை தடைசெய்ய ஜேர்மன் அரசு தீவிர நடவடிக்கை

பேர்லின், டிசெ. 11

ஜேர்மனியில் அரசியல் தஞ்சமடைந்துள்ளோர் மீது வன்முறைத் தாக்குதலில் ஈடுபட்ட வலதுசாரிக் கட்சிக்குத் தடைவிதிக்க நாடாளுமன்றம் நீதிமன்றத்தை நாடியுள்ளது.

தீவிர வலதுசாரிக் கட்சியான ஜேர்மன் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அக் கட்சியின் ஆதரவாளர்கள் ஆகியோர் அரசியல் தஞ்சமடைந்த வெளிநாட்டினர் மீது நடத்தப்பட்ட வன்முறைத் தாக்குதல்களில் நேரடியாகப் பங்கு கொண்டதாக நிரூபிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து,

ஜனநாயகக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பதவி விலக்கவும், அக் கட்சியைத் தடை செய்யவும் ஜேர்மன் அரசு முடிவு செய்தது.

இது குறித்துக் கொண்டு வரப்பட்ட பிரேரணையை ஜேர்மனிய நாடாளுமன்றம் நிறைவேற்றியது.

நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அரசமைப்பு விதிக்கமைய கூட்டாட்சி அரசமைப்புச் சட்ட நீதிமன்றத்திடம் அனுமதி பெற நாடாளுமன்றம் முன்வைத்துள்ளது.

சர்வாதிகாரி ஹிட்லரின் நாஜிக் கொள்கைகளைப் பின்பற்றும் ஜேர்மன் ஜனநாயகக் கட்சி மீதான இந்த நடவடிக்கை அங்கு அரசியல் தஞ்சம் கோருவோருக்குப் பாதுகாப்பை உறுதி செய்யும் என்று கருதப்படுகிறது.

(ஒ-5-6)

## செசன்யாவில் குண்டுவெடிப்பு: 22 பேர் பலி!

மொஸ்கோ, டிசெ. 11

ரஷ்யாவில் செசன்ய பகுதியில், காரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் 22 பேர் கொல்லப்பட்டனர்.

குரோஸ்னி அருகே அல்கான்யு கிராமத்தில் மசூதி அருகே நிறுத்தப்பட்டிருந்த காரிலேயே குண்டு வெடித்துள்ளது. இந்தச் சம்பவத்தில் 52 பேர் காயமடைந்துள்ளனர். (ஒ-7)


## வீரப்பனையும் புலிகளையும் ஒன்றுபடுத்திப் பேசுவது கேவலம்

### வை. கோபால்சாமி தெரிவிப்பு

கோவை, டிசெ. 11

சந்தனமரக்கடத்தல்காரன் வீரப்பனையும், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தையும் ஒன்றுபடுத்திப் பேசுவது கேவலமானது என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை. கோபால்சாமி கூறியுள்ளார்.

கோயம்புத்தூரில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.



வீரப்பன் இங்கிருந்து தப்பி இலங்கைக்குச் சென்று அங்கு வன்னிக்காட்டுக்குள் தஞ்சம் புகுந்துள்ளதாகக் கூறப்படுவது அர்த்தமற்றது என்று கூறிய வை. கோபாலசாமி விடுதலைப் புலிகளுக்கும், வீரப்பனுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று வலியுறுத்திக் கூறினார். [ஒ-8]

அமெரிக்க அதிபர் பதவித் தேர்தல்:

## அடுத்தடுத்த 3 தீர்ப்புகளால் இறுதி முடிவு அறிவிப்பதில் சிக்கல்

வாஷிங்ரன், டிசெ. 11

அமெரிக்க அதிபர் தேர்தல் தொடர்பாக அடுத்தடுத்து வெளிவந்த 3 நீதிமன்றங்களின் தீர்ப்புகளால் அதிபர் பதவிக்கான முடிவை அறிவிப்பதில் மேலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதே சமயம் புளோரிடா சட்டமன்றம் புஷ்சை அதிபராக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

3 நாள்கள் முன்னர் ஜனநாயகக்கட்சி வேட்பாளர் அல்கோர்தாக்கல் செய்தமனுவை

உலக அரங்கில்

விசாரித்த புளோரிடா உயர் நீதிமன்றம் மாநிலத்தின் அனைத்துக் கவுண்டிகளிலும் அளிக்கப்பட்ட வாக்குகளில் சர்ச்சைக்குரியவற்றை ஆள்கள் மூலம் எண்ண அனுமதி அளித்திருந்தது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து புஷ்ஷின் சட்டத்தரணிகள் அட்லாண்டா மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்தனர்.

சர்ச்சைக்குரிய வாக்குகள் எண்ணப்படுவது அரசியல் சாசனத்துக்கு முரணானது என்று வாதிட்ட அவர்கள் வாக்குகள் மீண்டும் எண்ணப்படுவதைத் தடுக்கும்படி கோரினர்.

ஆனால் மேன்முறையீட்டு நீதிமன்றம் புஷ்தரப்புக் கோரிக்கையை நிராகரித்ததுடன் வாக்குகள் எண்ணி முடிக்க ஒரு நாள் காலக்கெடுவும் விதித்தது. இதனைத் தொடர்ந்து வாக்குகள் எண்ணப்பட்டு வந்தன.

முன்னர் மீண்டும் எண்ணப்பட்ட சில கவுண்டிகளின் முடிவுகளால் அல்கோரைவிட புஷ் அதிகம் பெற்றவாக்குகள் 154 ஆகக் குறைந்திருந்ததால் அனைத்து கவுண்டிகளிலும் ஆள்கள் மூலம் வாக்குகள் மீண்டும் எண்ணப்பட்டால் அல்கோர் வெற்றி பெறுவது உறுதி எனக் கருதப்பட்டது.

இந்த நிலையில் அட்லாண்டா நீதிமன்றத்தீர்ப்பு வெளிவந்த சில மணித்தியாலயங்களில் அமெரிக்க உச்ச நீதிமன்றம் ஆள்கள் மூலம் வாக்குகள் எண்ணப்படுவதை உடனடியாக நிறுத்தும்படி உத்தரவிட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பு அல்கோருக்குப் பேரிடியாக அமைந்துள்ளது என்று கருதப்படுகிறது. [ஒ-5-6]

## புஷ்ஷை அமெரிக்க அதிபராக்க புளோரிடா சட்டசபை முயற்சி

அமெரிக்க அதிபர் பதவிக்கான தேர்தலின் முடிவுகள் அறிவிப்பதில் இழுபறி நிலை நீடிப்பதையடுத்துப் புளோரிடா மாநிலச் சட்டசபை ஜோர்ஜ். டபிள்யூ புஷ்ஷை அதிபராக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

புளோரிடா சட்டசபையில் புஷ்ஷின் குடியரசுக் கட்சி பெரும்பான்மைப் பலம் பெற்றுள்ளது.

இதனைப் பயன்படுத்திச் சட்டசபையின் சிறப்புக் கூட்டத்தைக் குடியரசுக் கட்சி கூட்டியது.

அந்தக் கூட்டத்தில் புளோரிடா மாநில 25 வாக்காளர் மன்றங்களின் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் புஷ்ஷின் குடியரசுக் கட்சி உறுப்பினர்கள் ஆவார்கள்.

ஆரம்பத்தில் கணனி மூலம் எண்ணப்பட்ட வாக்குகளின் அடிப்படையிலேயே இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

நாளைக்குள் சட்டப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு இறுதி முடிவு அறிவிக்கப்படாவிட்டால் 25 பேரினதும் பெயர்ப்பட்டியலை உத்தியோக பூர்வமாக வாஷிங்ரனுக்கு அனுப்ப சட்டசபை தீர்மானித்துள்ளது.

தேர்தல் விதிகளின் படி. 25 கவுண்டிகளிலும் குடியரசுக் கட்சியினரே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதால், புளோரிடாவில் புஷ் வென்றதாக ஏற்றுக்கொள்ளப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-5-6)

அசாமில் பண்டிகையை முன்னிட்டு

## தீவிரவாதிகள் குடும்பத்தினரைச் சந்திக்க இந்திய ராணுவம் அனுமதி

கௌகாத்தி, டிசெ. 11

இந்தியாவின் அசாம் மாநிலத்தில் பிரதான பண்டிகையை முன்னிட்டு தலைமறைவு தீவிரவாதிகள், தத்தமது வீடுகளுக்கு செல்லலாம் என்று மாநில ஆளுநர் லெப்டினன்ட் ஜெனரல் சின்கா அறிவித்துள்ளார்.

அசாமில், 'மாத்பிகு' என்ற பண்டிகை ஜனவரிமாதத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுவது வழக்கம்.

எதிர்வரும் ஜனவரி மாதம் கொண்டாடப்படவுள்ள 'மாத்பிகு' பண்டிகையின் போது, தீவிரவாதிகள் தத்தமது குடும்பத்தினரைசென்று சந்திக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக சின்கா தெரிவித்தார்.

குடும்பத்தினரைச் சந்திக்க வரும் தீவிரவாதிகள் ஆயுதங்கள் இன்றி வரவேண்டும் என்று அறிவுறுத்திய சின்கா அந்தச் சமயத்தில் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படமாட்டாது என்று தெரிவித்தார். (ஒ-5-6)

# காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை தனியாருக்கு விற்க அரசு முயற்சி

கொழும்பு, டிசெ. 11

தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைத் தனியார் மயப்படுத்த அரசு திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கூட்டுத்தாபனத்தை வாங்குவதற்கு பல நிறுவனங்கள் ஏற்கனவே விண்ணப்பித்துள்ளதாகவும் அவற்றில் சிங்கப்பூர் மற்றும் பிரிட்டனைச் சேர்ந்த நிறுவனங்களும் அடங்கி உள்ளதாக 'லக்பிம' பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஹற்றன் நாஷனல் வங்கி, செலிங்கோ மற்றும் ஜனசக்தி போன்ற நிறுவனங்களும் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை விலைக்கு வாங்க விண்ணப்பித்துள்ளன.

அடுத்த ஆண்டு ஜனவரி பிற்பகுதியில் காப்புறுதி நிறுவனத்தை அரசு தனியாருக்கு விற்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை —

மக்கள் வங்கி, இலங்கை வங்கி போன்ற அரசகம்பனிகளையும் தனியார் மயப்படுத்தும் நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டிருப்பதாக 'லக்பிம' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-20)

# வீடுகளைப் பார்வையிட மக்கள் முண்டியடிப்பு

அரியாலை, டிசெ. 11

கொழும்புத்துறை, பாஷையூர், அரியாலைப் பகுதிகளில் உள்ள வீடுகளைப் பார்வையிடப் படையினர் அனுமதி வழங்கியதை அடுத்துப் பெரும் எண்ணிக்கையான மக்கள் வீடுகளைச் சென்று பார்வையிட்டனர்.

இந்தப் பகுதிகளுக்குச் சென்று வர இராணுவத்தினர் கடந்த வெள்ளிக்கிழமை அனுமதி வழங்கியிருந்தனர்.

அந்தந்தப் பகுதிக் கிராம சேவையாளர்களின் உதவியுடன் மக்கள் தமது வீடுகளைச் சென்று பார்வையிட்டனர். வீட்டில் இருந்து விறகு மற்றும் பொருள்களைப் பலர் எடுத்துவருவதைக் காண முடிந்தது.


## மரண அறிவித்தல்

### திருமதி இராஜபட்சம் மகேஸ்வரி

சுழிபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லப்பா இராஜபட்சம் [Engineer Malaysia] அவர்களின் அன்பு மனைவி மகேஸ்வரி 9 - 12 - 2000 அன்று ஆஸ்திரேலியாவில் காலமானார்.

இவர் இராஜேஸ்வரி [Malaysia], புவனேஸ்வரி, இரத்தினேஸ்வரி [Canada], ஆனந்தராஜா [London], செல்வராணி [Canada], மகாலட்சுமி [Australia], ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேந்திரன் [Doctor, Malaysia], திருச்சிற்றம்பலம் [Retd. Asst. Auditor General], காலஞ்சென்ற சண்முகநாதன் [Canada], புவனம் [London], தயானந்தன் [Former Lecturer, Institute of Technology' Vaddukodai], ஞானபண்டிதன் [Engineer, Australia] ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16 - 12 - 2000 அன்று ஆஸ்திரேலியாவில் நடைபெறும். இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
P. திருச்சிற்றம்பலம் (மாதகல்)
(மருமகன்)

விதானையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு. (81541)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
14 — 06 — 1922



மறைவு
11 — 11 — 2000

### கபிரியேல் ஜெபநேசம்

நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்.
என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்.

யோவான் 11: 25

எங்கள் தாயார் மறைந்த 31ஆம் நாளை நினைவுகூர்ந்து அவர் ஆத்மா இளைப்பாறுதலுக்காக வேண்டும் அதேவேளை அன்னாரின் அடக்க ஆராதனையில் கலந்து கொண்ட சபையார் ஏனையோருக்கும் ஆராதனை நடத்திய எமது சபைக்குருவண. S. P. நேசகுமார் அவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

- குடும்பத்தினர்.

இல. 5, ஆடியபாதம் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (81551)


## சமய சந்நிதிகளில்

யாழ். வண்ணை அருள்மிகு ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமான் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணியளவில் 'திருப்பாணாழ்வார்' உற்சவம் விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை, வழிபாடுகளுடன் நடைபெறும்.

[3-30]

★ ★ ★

சரித்திரப் பிரசித்தி பெற்ற தெல்லிப்பழை அருள் மிகு ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் இன்று திங்கட்கிழமை கார்த்திகை மாதப் பூரணை விழா விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெறும்.

★ ★ ★

கோண்டாவில்மேற்கு அருள்மிகு ஸ்ரீஅதிபதீஸ்வரர் கோயிலில் கார்த்திகைமாதத் திங்கள் 4 ஆம் சோமவார உற்சவம் விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகளுடன் இன்று திங்சட்கிழமை நடைபெறும், [3-30]

★ ★ ★

வடமராட்சி, டிசெ. 11

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய சோமவாரப் பூசை இன்று பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும். மாலை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று சுவாமி வீதி உலா நடைபெறும்.

(ஐ—173)

★ ★ ★

கொழும்புத்துறை, டிசெ. 11

யாழ். குடாநாட்டில் உள்ள விநாயகர் ஆலயங்கள், விநாயகர் விக்கிரகம் உள்ள கோயில்களில் நாளை செவ்வாய்க்கிழமைமுதல் விநாயகர் விரதம் [பிள்ளையார் பெருங்கதை] ஆரம்பமாகித் தொடர்ந்து 21 தினங்கள் நடைபெறும்.

தினசரி விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை, வழிபாடுகளும், பிள்ளையார் பெருங்கதைப்படிப்பும் நடைபெற்று எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 21 ஆம் நாள் பிள்ளையார் பெருங்கதைபடிப்புபூர்த்தியடையும். இதனைத் தொடர்ந்து கஜமுக சூரசங்காரம் இடம்பெறும். (ஐ-30)

## குடிநீர்த் திட்டம்

வலி. கிழக்கு, டிசெ. 11

அச்சுவேலிப் பிரதேசத்தில் குடிதண்ணீர்ப் பிரச்சினையை நிவர்த்தி செய்யும் வகையில் 50 லட்சம் ரூபா செலவிலான திட்டம் ஒன்று செயற்படுத்தப்படவிருக்கின்றது.

இந்த நிதிஉதவியை வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு—கிழக்கு தமிழ் விவகார அமைச்சு வழங்கியுள்ளது.

[உ-180]

# செய்திக் கொத்து

## நூல்கள் கொள்முதல்

காரைநகர், டிசெ. 11

ஊர்காவற்றுறைப் பிரதேச சபைக்குட்பட்ட இரண்டு நூலகங்களுக்கு பிரதேச சபையின் விசேட நிதிமூலம் நூல்கள் கொள்முதல்செய்யப்பட்டுள்ளன.

காரைநகர் வடக்கு, தெற்கு நூலகங்களுக்கே ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 360 நூல்கள் வழங்கப்பட்டன.

(ஐ-73)

## தொழிற்சாலைக் கட்டடம்

அரியாலை, டிசெ. 11

அனலைதீவு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலைக்கான கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

போத்தலில் கள் அடைத்துப் பாதுகாப்பான முறையில் வைப்பதற்கான இயந்திர வசதிகளைக் கொண்ட தொழிற்சாலையை சங்கம் விரைவில் நிறுவ உள்ளது.

(ஐ-17)

## வலுவிழந்தோர் தின விழா

சண்டிலிப்பாய், டிசெ. 11

சண்டிலிப்பாய்ப்பிரதேச செயலகம் கடந்த 6 ஆம் திகதி முற்பகல் நடத்திய வலுவிழந்தோர் தினவிழாவில் 20 வலுவிழந்தவர்களுக்கு உடுதுணிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

பிரதேச செயலர் நா. வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில்சமூகசேவைஉத்தியோகத்தர் அ. அமிர்தலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலய ஆசிரியர் ஆ. ரவீந்திரன் இவ் விழாவில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்.

சித்திரப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. மானிப்பாய் ''வாழ்வகம்'' இல்ல மாணவர்களின் 'ஆனந்த கானங்கள்' நிகழ்வும் இடம்பெற்றது.

(ஐ-135)

## கருத்தரங்கு

தென்மராட்சி, டிசெ. 11

சர்வதேச 'எய்ட்ஸ்' எதிர்ப்புத் தினத்தையிட்டு சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவினரால் அண்மையில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் எய்ட்ஸ் நோய் தடுப்பு பற்றிய கருத்தரங்கு இடம்பெற்றது.

யாழ். மாவட்ட ஆணையாளர் எஸ். போஜன் எய்ட்ஸ் தடுப்பு முறைகள் பற்றி கருத்துரைகள் வழங்கினார். [ஐ-117]

## செயற்பாட்டறை அமைப்பு

காரைநகர், டிசெ. 11

காரைநகர் வியாவில் சைவ வித்தியாலயத்தில் புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைய 90 ஆயிரம் ரூபா செலவில் ஆரம்பக் கல்விச் செயற்பாட்டறை அமைக்கப்பட்டுள்ளது.

கல்வித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட நிதி மூலம் இந்த செயற்பாட்டறை அமைக்கப்பட்டதாக வித்தியாலய அதிபர் எ. குமரேசமூர்த்தி தெரிவித்தார். [ஐ-73]

## மீண்டும் திரிபோஷா மா

யாழ்ப்பாணம், டிசெ. 11

நீண்ட கால இடைவெளிக்குப்பின்னர் யாழ். மாவட்டத்துக்குக் கொழும்பிலிருந்து திரிபோஷா மா அனுப்பி வைக்கப்படவுள்ளது.

முதற்கட்டமாக 2 ஆயிரம் திரிபோஷா மா பைகள் இந்துருவலி கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் திரிபோஷா மா யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததும் சுகாதாரத் திணைக்களத்தினால் கர்ப்பிணித் தாய்மார் மற்றும் சிறுவர்களுக்கு வழங்கப்படவுள்ளது. [ம-5]

## கிளைக்குழுத் தேர்தல்

அரியாலை, டிசெ. 11

யாழ். குடாநாட்டில் உள்ள அனைத்து பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினதும் கிளைக்குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் ஏற்பாடுகளை கூட்டுறவுத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

எதிர்வரும் 2001 ஆம் ஆண்டில் மேற்படி சங்கங்களின் பொதுச்சபைகளைக் கூட்டி புதிய நெறியாளர் குழுக்களைத்தெரிவு செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அறிய வருகின்றது.

[ஐ-17]

## மீற்றர் பம்புகள் தருவிப்பு

அரியாலை, டிசெ. 11

யாழ். பிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கொழும்பில் இருந்து ஐந்து மீற்றர் பம்புகளை கப்பலில் எடுத்து வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்,

இந்த மீற்றர் பம்புகள் தேவைப்படும் எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு வழங்கப்படவுள்ளன.

[ஐ-17]

## முதற்கட்ட கட்டட வேலை பூர்த்தி

சண்டிலிப்பாய், டிசெ. 11

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் புதிதாக நிறுவப்பட்டுவரும் 110 அடி நீளமும் 25 அடி அகலமும் கொண்ட மாடிக் கட்டடத்தின் முதல் கட்ட கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன என்று கல்லூரி அதிபர் நா. சண்முகசுந்தரம் தெரிவித்தார்.

[ஐ-135]

## உப தவிசாளர் நியமனம்

தென்மராட்சி, டிசெ. 11

பச்சிலைப் பள்ளிப் பிரதேச சபையின் உப தவிசாளராக திருமதி வீரக்குட்டி தயாநிதி ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியினால் (புளொட்) நியமிக்கப்பட்டுள்ளார்.

[ஐ-117]

## நூலகம் அமைப்பு

கொழும்புத்துறை டிசெ. 11

தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கென, பாடசாலை அதிபர் மற்றும் பழைய மாணவர்களின் கூட்டு உதவியுடன் நூலகம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(ம-30)

நூலகம் யாழ்ப்பாண..

# தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் நலன்பேண புதிய அமைப்பு

சாவகச்சேரி,டிசெ.11

தென்மராட்சியிலிருந்து இடம் பெயர்ந்து வடமராட்சி மற்றும் வலிகாமம் பகுதியில் தங்கியுள்ள மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முன் முயற்சிகளை எடுப்பதற்காக தென்மராட்சி இடம்பெயர்ந்தோர் நலன்புரி அமைப்பு என்ற சங்கம் நேற்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

யாழ்.நகரில் புதிய உயர் கல்விக் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற கூட்டம் ஒன்றிலேயே இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது.

"தென்மராட்சிப் பகுதி மக்களின் உடைமைகளில் 90 சதவீதமானவை அழிக்கப்பட்டுள்ளதால் மக்கள் மீளக் குடியமர முடியாத சூழ்நிலை அங்கு நிலவுகின்றது. எனவே அங்கு எஞ்சியுள்ள தமது உடமைகளை மக்கள் எடுத்தவர அனுமதிக்க வேண்டும்." என்று சம்பந்தப்பட்டவர்களைக் கோரும் தீர்மானம் ஒன்று இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

முதல் கட்டமாக வடபகுதி இராணுவத் தளபதி, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுப்பதெனவும் முடிவாகியது.

இந்த அமைப்பின் தலைவராக எஸ்.சபாநாயகமும் செயலாளராக எஸ்.நாகேந்திரனும் தெரிவுசெய்யப்பட்டனர். செயற்குழுவும் தெரிவாகியது. (உ-3-31-74)

# கிறிஸ்தவ மதத்தினருக்கும் தனி அமைச்சு அமைக்குக!

## யாழ். ஆயர் கோரிக்கை

ஏனைய மதத்தினருக்கு தனியான அமைச்சு உள்ளது போன்று கிறிஸ்தவ மதத்தினருக்கும் தனியான அமைச்சு உருவாக்கப்பட வேண்டும் என்று யாழ். ஆயர் அதி வண. தோமஸ் சவுந்தரநாயகம் தம்மிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக சமூக சேவைகள், மீனவ சமூக வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

தம்முடன் யாழ்.ஆயர் நடத்திய சந்திப்பின்போது இது தொடர்பான கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளார் என்றும்-

ஜனாதிபதி நாடு திரும்பியதும் இந்த மகஜரை அவரிடம் தாம் கையளிக்க விரும்புவதாகவும் - அமைச்சர் மேலும் சொன்னார்.(உ-3)

## வெள்ளவத்தையில் குண்டு மீட்பு

வெள்ளவத்தைப் பகுதியில் 60 மி.மீற்றர் ரகத்தைச் சேர்ந்த மோட்டார் குண்டு ஒன்று பொலீஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வெள்ளவத்தை டபிள்யூ.ஏ.சில்வா மாவத்தையில் பயன்படுத்தப்படாத காணி ஒன்றில் இருந்தே இந்தக் குண்டு நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இந்தக் காணியில் நேற்றுமுன்தினம் வெள்ளவத்தைப் பொலீஸார் நான்கு குண்டுகளைக் கண்டெடுத்தனர். (உ-5)

## புதிய ஓய்வூதியத் திட்டம்

அரசாங்க ஊழியர்களுக்கான புதிய ஓய்வூதியத் திட்டம் அடுத்த வருடம் முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவுள்ளது. இந்தத் திட்டத்தினை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பணிப்பின் பேரில் விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு நிகழ்காலத் தேவைக்கு ஏற்பவும் முறைகேடுகளைத் தவிர்க்கும் விதத்திலும் அமையவுள்ள புதிய ஓய்வூதிய முறையை தயாரிப்பது தொடர்பான பணிகளில் ஈடுபட்டு வருகிறது என்று அறிவிக்கப்படுகின்றது. (உ-5)

## புலிகளின் சடலம் ஒப்படைப்பு

களுவாஞ்சிக்குடியில் கடந்த வெள்ளிக்கிழமை படையினருடன் ஏற்பட்ட மோதலின் போது உயிரிழந்த விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரின் சடலம் நேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டது என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவத்தில் பலியானவர் விடுதலைப்புலிகளின் பிரதேச தலைவர்களில் ஒருவரான நேரு என அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## அடிக்கல் நடும் வைபவம்

வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ்ச் சங்க புதிய மண்டப அடிக்கல் நடும் வைபவம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சித்தன்கேணியில் அமைந்துள்ள தமிழ்ச் சங்கப் பணிமனை அம்பலவாண நாவலர் வளாகத்தில் நடைபெறவுள்ளது.

புலவர்மணி அ.ஆறுமுகம் தலைமையில் நடைபெறும் இந்த வைபவத்தில் நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், பேராயர் கலாநிதி சு.ஜெபநேசன் ஆகியோர் ஆசியுரை வழங்குவார்கள். பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் க.வே.குகேந்திரன், வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் திரிலோகநாதன் ஆகியோர் பங்குபற்றுவர்.

## கைது

அம்பாறை வீரகொட பிரதேசத்தில் கடந்த வாரம் மின்மாற்றி தகர்க்கும் சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் சந்தேக நபர் ஒருவர் பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபரின் வீட்டில் சோதனை மேற்கொண்ட சமயம் இரண்டு கிலோகிராம் எடையுள்ள குண்டு ஒன்றை தாங்கள் கண்டுபிடித்துள்ளதாக பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நபரின் தகவல்களின் அடிப்படையில் மேலும் ஒருவர் கைதுசெய்யபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-5)




யாழ்.நீராவியடி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் அண்மையில் அப் பகுதியைச் சேர்ந்த பெண் முதியோர்களைக் கௌரவிக்கும் நிகழ்ச்சியை நடத்தியது.

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் பயிற்சி பெற்ற சங்கத்தின் யுவதிகளுக்கு இந் நிகழ்ச்சியில் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி சு.நாகலோஜினி உரையாற்றுவதையும், கௌரவிக்கப்பட்ட முதியோர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் மாவட்ட ஆணையாளர் க.அருந்தவராஜா, யாழ்.இந்து அரம்ப பாடசாலை அதிபர் வே.ஞானகாந்தன் ஆகியோரும் இந் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.(ஐ-10)

# சமாதானப் பேச்சுக்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும் இந்தக் குழுவினால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் வாசித்துக் காண்பிக்கப்பட்டது.

மனிதஉரிமைகள் தினத்தை முன்னிட்டு நேற்று யாழ்.கத்தோலிக்க மறை மாவட்ட நீதி, சமாதான ஆணைக் குழுவினால் சமாதானம் வேண்டி யாழ். நகரில் பேரணி ஒன்று நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தச் சமாதானப் பேரணி நடத்துவதற்கான அனுமதி பொலீஸாரினால் மறுக்கப்பட்டதை அடுத்து யாழ். பேராலயத்தில் சமாதான வழிபாடுகள் இடம்பெற்றன.

ஜனாதிபதிக்கும் தலைவர் பிரபாகரனுக்கும் யாழ்.கத்தோலிக்க மறை மாவட்ட நீதி, சமாதான ஆணைக் குழுவின் தலைவர் வண. பிதா ஏ. ஐ.பேர்னாட், செயலாளர் எஸ்.எக்ஸ். குலநாயகம் ஆகியோரினால் அனுப்பப்பட்ட கடிதத்தின் விபரம் வருமாறு:-

தற்போது சமாதானத்தை முன்னிட்டு தாங்கள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக இம் மடலை வரைகின்றோம்.

சமாதானமே இன்று எம் மக்களின் முதற் தேவையாக உள்ளது. நீண்டகாலமாக நீடித்துவரும் கொடிய போரில் நாம் சந்தித்துள்ள இழப்புக்களோ அளப்பரியவை.

இவற்றுக்கு முற்றுப்புள்ளி இடும் வகையில் யுத்தத்தை உடன் நிறுத்தி சமாதானப் பேச்சுவார்த்தைகளை துரிதப்படுத்தும்படி தங்களைப் பணிவன்புடன் கோருகின்றோம்.

தடைகளும் எதிர்ப்புக்களும் நேர்ந்தாலும் முயற்சிகளைக் கைவிடாது அவற்றை முன்னெடுத்துச் செல்வதற்கு எமது வாழ்த்துக்களையும் பூரண ஆதரவினையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சர்வதேச மனித உரிமைகள் தினமான இன்று யாழ்.கத்தோலிக்க மக்கள் அனைவரும் பங்குபற்றத்தக்க முறையில் சமாதானத்துக்கான செபமாலைப் பேரணியை ஒழுங்குபடுத்தினோம்.

இந்தப் பேரணிக்கு முதலில் அனுமதி வழங்கிய சம்பந்தப்பட்ட அதிகாரிகள், பின்னர் கவலைதரும் முறையில் அதனை ரத்துச் செய்துவிட்டனர்.

இருப்பினும் தங்களுடைய சமாதான முயற்சிகளுக்கு இறையாசி வேண்டி யாழ்.பேராலயத்திலும் குடாநாட்டிலுள்ள சகல ஆலயங்களிலும் விசேட வேண்டுதல் நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டன.

இப்படி அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

## குடாநாட்டில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோயாளி இவரேயாவார்.

சாதாரண காய்ச்சலுடன் சில தினங்களுக்கு முன்பு யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த இவருக்கு 'டெங்கு' காய்ச்சலின் அறிகுறிகள் தென்பட்டதை அடுத்து இவரது இரத்தம் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டது. இவருக்கு 'டெங்கு' காய்ச்சல் தொற்றியிருப்பதை உறுதிசெய்யும் பரிசோதனை அறிக்கை யாழ்.ஆஸ்பத்திரிக்குக் கிடைத்துள்ளது.

ஏற்கனவே 'டெங்கு' காய்ச்சல் அறிகுறியுடன் காணப்பட்ட இருவரது இரத்த மாதிரிகள் யாழ்.ஆஸ்பத்திரியில் இருந்து கொழும்புக்குப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளன. அவை தொடர்பான பரிசோதனை அறிக்கைகள் இன்னும் இங்கு கிடைக்கவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது.

'டெங்கு' நோய் இங்கு பரவியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருப்பதை அடுத்து நுளம்பு மூலம் பரவும் இந்த நோய் தொடர்பாக முழு விழிப்புடன் இருக்குமாறு பொதுமக்களை வைத்திய வட்டாரங்கள் எச்சரித்துள்ளன.

சாதாரண காய்ச்சல் ஏற்பட்டாலும் கூட அலட்சியம் செய்யாது தகுந்த டாக்டர்களின் ஆலோசனை பெற்று ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெறுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

உயிரிழப்பை ஏற்படுத்தும் இந் நோய் பரவுவதைத் தடுக்க நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் முழு வீச்சில் முடுக்கி விடப்படவேண்டும் என்றும் மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ-15-139)

## இசை அரங்கேற்றம்

கொழும்பு,டிசெ.11

சங்கீத வித்துவான் ஏ.கே.கருணாகரனின் புதல்வியரான சுவர்ணாங்கி கருணாகரன், சியாமளாங்கி கருணாகரன் ஆகியோரின் இசை அரங்கேற்றம் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு இராமகிருஷ்ணன் மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பி.பி.தேவராஜ் கலந்துகொள்வார்.

அரங்கேற்ற நாயகிகள் இருவரும் தமிழ் நாடு அரசு இசைக் கல்லூரியில் சங்கீத வித்துவான் பட்டப்படிப்பில் முதல் பிரிவில் சிறப்புத் தேர்ச்சி பெற்று தங்கப்பதக்கம் பெற்றவர்கள். சென்னைப் பல்கலைக்கழகத்தின் பி.ஏ.இசை இறுதிப் பரீட்சையில் இரண்டாம் பிரிவில் சித்திபெற்று தற்போது சென்னை ராணி மேரி கல்லூரியில் எம்.ஏ.இசைப் பரீட்சைக்கும் தோற்றவுள்ளனர். (உ)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

We Serve

எமது கழக உறுப்பினரும்
முன்னாள் தலைவருமாகிய
லயன் S.N.கதிரவேலு
அவர்கள் சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதையிட்டு
பெருமையுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(C/14249) யாழ்.லயன்ஸ் கழகம்.



ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்
இன்பர்சிட்டி ~ வியாபாரி மூலை,
பருத்தித்துறை.

வணக்கத்திற்குரிய அடியார்களுக்கும்
ஆலய உபயகாரர்களுக்கும்
ஆலய (உரிமையாளர்) தர்மகர்த்தாவினது

பகிரங்க அறிக்கை

எனது 27-08-1980 திகதிய அறிக்கையின் படிக்கு தத்துவம் பெற்று இருபது வருட காலத்திற்கு மேலாக எமது ஆலய நிர்வாகப் பொறுப்பாளராகச் செயல்பட்டுக்கொண்டிருக்கும் தொண்டர் மதிப்பிற்குரிய திரு. வே. க. கந்தையா அவர்களை திரும்பவும் இன்று தொடக்கம் தத்துவம் பெற்ற ஆலயநிர்வாகப் பொறுப்பாளனாகவும் ஆலய ஆதனங்களுக்குப் பொறுப்பாளராகவும் நியமனம் செய்து அவருக்கு உதவியாக எனது மருமகன் திரு. கந்தையா ஜெகதீசன் அவர்களை உதவி ஆலய நிர்வாகப் பொறுப்பாளராகவும் நியமனம் செய்கின்றேன்.

இங்ஙனம்
Dr.ந.இராசமாணிக்கம்
(ஆலய பரம்பரை அறங்காவலர்)

(C/14250)



திறப்புவிழா அழைப்பிதழ்
E.N.T.
& MEDICAL CLINIC

நிகழும் கார்த்திகை மாதம் 26ஆம் திகதி இன்று (11.12.2000)
திங்கட்கிழமை நண்பகல் 12.20 - 1.50 மணிவரையுள்ள
சுப வேளையில்.

இடம்:-
முனீஸ்வராவீதி, யாழ்ப்பாணம்.
(ஹட்டன் நஷனல் வங்கி பின்புறம் - பஸ் நிலைய முன் ஒழுங்கை)

E.N.T. சத்திரசிகிச்சை நிபுணர்
உயர்திரு. Dr.S.சிவசுப்பிரமணியம்
அவர்களால் திறந்துவைக்கப்படும்.

இந்த அழைப்பிதழை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்.

தங்கள் நல்வரவை நாடும்:
நிர்வாகி.

குறிப்பு:
(E.N.T.) காது, மூக்கு, தொண்டைக்கான சகல வைத்திய ஆலோசனைகளும், சத்திரசிகிச்சைகளும் இங்கு மேற்கொள்ளப்படும்.

(81559)



மொடேண் கல்வி நிலையம்
நெல்லியடி

2001 DAY CLASS

இரசாயனவியல் இணைந்த கணிதம்
திரு.சிவத்திரன் திரு.தவசேகர்

குறிப்பு :
செவ்வாய் 12.12.2000 ~ பி.பகல் 3.30 (பழை.நேரம்)
இரசாயனவியல் :- சிவத்திரன் (C/14251)

# பேச்சு விடயத்தில் அரசுத் தரப்பில் பொது நிலைப்பாடு இல்லாதது ஏன்?

## வெளிநாட்டுத் தூதர்கள் எழுப்பும் கேள்வி

கொழும்பு,டிசெ.11

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவது தொடர்பாக அரசாங்கத்துக்குள் பொது நிலைப்பாடு இல்லாதது ஏன்? என்று வெளிநாட்டுத் தூதுவர்கள் அரசிடம் கேள்வி எழுப்பியுள்ளனர்.

வெளிநாட்டுக்குத் தூதுவர்களுக்கும் அரசுப் பிரதிநிதிகளுக்கும் இடையில் அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்தக் கேள்வி எழுப்பப்பட்டது.

இந்தச் சந்திப்பில் அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல்.பீரிஸ், திறைசேரித் தலைவர் ஏ.எஸ்.ஜயவர்த்தன, திறைசேரியின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர ஆகியோர் பங்குபற்றினர்.

எதிர்வரும் 17ஆம், 18ஆம் திகதிகளில் பாரிஸில் இடம்பெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் மாநாட்டுக்கு முன்னர் அரசின் நிதி திட்டமிடல் குறித்து மேற்கு நாடுகளின் தூதர்களுக்கு விளக்கும் வகையில் இந்தச் சந்திப்பு ஏற்பாடாகியிருந்தது.

பல தரப்பட்ட கேள்விகளைத் தூதர்கள் அரசுப் பிரதிநிதிகளிடம் எழுப்பினர்.

எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் இன்னும் எத்தனை அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களை நீங்கள் நியமிக்கப் போகிறீர்கள் என்றும்-

சுயாதீன பொலீஸ் ஆணைக் குழு, சுயாதீன நீதிச் சேவை ஆணைக குழு, சுயாதீன தேர்தல் ஆணைக் குழு என்பவற்றை எப்போது நியமிக்கப் போகிறீர்கள் என்றும் -

பேச்சு ஆரம்பிப்பதாக இருந்தால் மீண்டும் யுத்தத்தைத் தொடர்ந்து மேற்கொள்வது ஏன்? என்றும்-

புதிய அரசமைப்புச் சட்டத்தை எப்போது கொண்டு வருவீர்கள் என்றும் -

நிதி உதவிகளை வழங்கக் கூடிய அளவுக்கு இந்த அரசு உறுதியுடையதா என்றும் -

வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்காமல் இடைக்காலக் கணக்கு வாக்கு அறிக்கையை சமர்ப்பித்தது ஏன்? என்றும் -

தூதுவர்கள் சரமாரியான கேள்விக் கணைகளைத் தொடுத்தனர்.

"எதிரியிடமிருந்து வரக்கூடிய தாக்குதல்களுக்குத் தேவையான பலத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவே யுத்தம் செய்கிறோம்" என்று அமைச்சர் பீரிஸ் பதிலளித்தார்.

"94 ஆம் ஆண்டிலும் அரசுக்கு ஓர் ஆசனமே கூடுதலாக இருந்த போதும் அரசு நிலைத்திருந்தது. தற்போதைய அரசு கவிழும் என்று அஞ்சத் தேவையில்லை" என்றும் அவர் கூறினார்.

"விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும் என்பதில் அரசு உறுதியாக உள்ளது. அதற்கான முன் முயற்சிகளில் அரசு ஈடுபட்டு வருகின்றது" என்றும் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.(உ-3)

### மடுமாதா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட முடிவுகள் தொடர்பாக ஆயர்கள் சங்கச் செயலாளரும் இரத்தினபுரி மாவட்ட ஆயருமான மல்கம் ரஞ்சித் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

ஐக்கிய இலங்கைக்குள் வடக்கு-கிழக்கு மக்களுக்கு கூடுதல் அதிகாரம் கிடைக்கக் கூடிய சமாதானத் தீர்வை உடன் காணவேண்டும். அந்தத் தீர்வை எட்ட 3 ஆம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(உ-3)

### கப்பல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீட்டு விநியோகத்தில் நிர்வாகச் சீர்கேடுகளும் முறைகேடுகளும் இடம்பெற்று வருவதாக வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழர் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இக்குறைபாடுகள் பற்றிப் பொதுமக்களின் மூலமும் பல புகார்கள் கிடைத்துள்ளன. குறிப்பாக சில அரசியல்வாதிகள் மற்றும் அரசியல்கட்சி அலுவலகங்களின் தலையீடு காரணமாக முறைகேடுகள் இடம்பெறுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனை அடுத்து பயணச் சீட்டுக்கள் விநியோகத்தில் நிலவும் சீர்கேடுகளையும் குறைபாடுகளையும் நிவர்த்தி செய்யும் வகையில் ஏற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ளும்படி அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார். இதனால் பயணச்சீட்டு வழங்கும் அலுவலகம் இடம்மாற்றப்பட உள்ளதுடன் நிர்வாகப் பணிகளும் மறுசீரமைக்கப்பட உள்ளன.

இத்தகைய நிர்வாகச் சீர்திருத்தங்களை அடுத்து பொதுமக்களுக்குத் தேவையான நடவடிக்கைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட உள்ளதுடன் பயணச்சீட்டு வழங்குவது பற்றிய புதிய நடைமுறை விரைவில் பத்திரிகை வாயிலாக பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தப்படும் என்றுள்ளது. (உ-3-5)

### 1250 பயணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுகள் வழங்கப்படும் என்றும் -

மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு செல்ல இருப்பவர்கள் ஆவணங்களுடன் சமுகம் தந்தால் முன்னுரிமை வழங்கப்படும் என்றும் -

வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதேசமயம்-

திருகோணமலையிலிருந்து ஆயிரம் பேருடன் நேற்றுமுன்தினம் புறப்பட்ட 'லங்காமுடித்த' நேற்று மாலையே காங்கேசன்துறைக்கு வந்து சேர்ந்தது. பயணிகள் கப்பலிலிருந்து இறக்கப்பட்டு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் இன்று காலை யாழ். நகருக்கு அழைத்து வரப்படுவர்.(உ-3)

### மோதல்

நுணாவில் பகுதியில் படையினர் நேற்றுமுன்தினம் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்ட சமயம் அங்கு மோதல இடம்பெற்றதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது. இந்த மோதலில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் மூவர் உயிரிழந்தனர் என்று தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது. (உ-3)

### பேசுவதற்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று கூறினாலும் சில நிபந்தனைகளை மறைக்கிறது. பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க நிபந்தனைகள் இல்லாத நிலையில் அரசாங்கம் உடனடியாகப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும்.

இதேவேளை 1997 இல் மேற்கொள்ளப்பட்ட லியம்பொக்ஸ் உடன்படிக்கையின்படி அரசின் நடவடிக்கைகள் எதிர்க்கட்சிக்கு அறிவிக்கப்பட வேண்டும். ஆனால் அரசாங்கம் இந்த ஒப்பந்தத்தைக் கூட மீறியுள்ளது. இதுவரை புலிகளுடன் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சி குறித்து ஐ.தே.கட்சிக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை என்றார். (உ-3)

# திருமலை - யாழ். அணிகள் நேற்று கிரிக்கெட் ஆட்டம்

திருகோணமலை,டிசெ.11

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் 15 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் அணியைத் தெரிவு செய்வதற்கான பயிற்சி ஆட்டங்கள் நேற்றுத் திருகோணமலையில் ஆரம்பமாகின.

நேற்று யாழ்.மாவட்ட அணியும், திருகோணமலை மாவட்ட அணியும் சிநேகபூர்வ ஆட்டம் ஒன்றில் பங்குபற்றின.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மாவட்ட அணி முதல் இன்னிங்ஸில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் யாழ்.அணி வீரர்களான ரஜீவ்குமார் 47 ஓட்டங்களையும், றோஹான் 20 ஓட்டங்களையும், ஐங்கரன் ஆட்டமிழக்காமல் 19 ஓட்டங்களையும் பெற்றனர். திருமலை அணி வீரர்களான அலெக்ஸாண்டர் 38 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுக்களையும், நளிந்த 25 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய திருமலை அணி 8 விக்கட்டுக்களை இழந்து 158 ஓட்டங்களைப் பெற்றது. திருமலை வீரர்களான நஸீர் 53 ஓட்டங்களையும், கிரிசாந்த 39 ஓட்டங்களையும் பெற்றனர். யாழ். அணி வீரர்களான ரஜீவ்குமார் 31 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் செல்வின் ஸைபிட 31 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுக்களையும் விஷ்ணுகாந்த் 41 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து இரண்டாவது இன்னிங்சில் ஆடிய யாழ்.அணி 2 விக்கட்டுக்களை இழந்து 32 ஓட்டங்களைப் பெற்றதுடன் ஆட்டம் நிறுத்தப்பட்டது. இதில் மதுஷன் ஆட்டமிழக்காமல் 14 ஓட்டங்களையும் றோஹான் பத்து ஓட்டங்களையும் பெற்றனர். யாழ்.அணிக்கும் மட்டக்களப்பு அணிக்கும் இடையிலான சினேகபூர்வ ஆட்டம் இன்று இடம்பெற உள்ளது. (உ-3)

### பழைய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றன.

மண்டைக் கல்லாறில் கலக்கும் அளவக்கை ஓடைகளிலும் பெருமளவு மட்பாண்டத் துண்டுகள் காணப்படுகின்றன.

இந்தப் பிரதேசம் இதுவரை காலமும் எந்த விதமான தொல்பொருள் ஆய்வுக்கும் உட்படுத்தப்படவில்லை என்று 1960ஆம் ஆண்டு இங்கு குடியமர்த்தப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

பழைய முறிகண்டி ஆதி கால ஆலயம் பழைய முறிகண்டிக் குளத்தின் கரையின் கீழ் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-5-164)

ENGLISH CLASSES

★ தரம் 6 முதல் தரம் 11 வரையிலான மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகளும்,
★ தரம் 9 முதல் தரம் 11 வரையிலான மாணவர்களுக்கான ஆங்கில இலக்கிய வகுப்புகளும்,
★ G.C.E. A/L மாணவர்களுக்கான பொது ஆங்கில வகுப்புகளும்

ஆரம்பம்:- இன்று 11.12.2000

தொடர்பு:-
கோ.சுப்பிரமணியம்,
இல.-62, பழம் றோட், கந்தர்மடம்.
(அனுமதிகளுக்கு பெற்றோர்/ பாதுகாவலர் வருகை அவசியம்)
1813411

இன்றைய வீடியோ CD வெளியீடு
என் சகியே
(திரையரங்குகளுக்கு முன்னுரிமை)
மூர்த்தி வீடியோ
மானிப்பாய் (C.14253)

சிறந்த நிறுவனத்தை தெரிவு செய்ய இதுவே தக்க தருணம் !
The time to select the very best Institute!

பல வருடங்களாக யாழ் நகரில் கணனி பயிற்சியை வழங்கும் முன்னணி நிறுவனம் என்று தம்மை தாமே கூறிக்கொள்ளும் நிறுவனங்கள் அங்கீகாரம் பெற்றவையா ? இவற்றால் சர்வதேச அங்கீகாரம் பெற்ற கணனி கல்வியை வழங்க முடியுமா ?...

IBMS எவ்வாறு!, ஆரம்பித்த ஒரு வருட காலத்துக்குள் அங்கீகாரம் பெற்றது!!

எவ்வாறெனில் ................

1) கணணி சிறப்பு, பொது பட்டதாரி விரிவுரையாளர்களை கொண்ட ஒரே ஒரு நிறுவனம்.
2) யாழ் நகரிலே அதிகூடிய புதிய நவீன கணணிகளை செய்முறைப் பயிற்சியளித்தலில் ஈடுபடுத்தி உள்ள ஒரே ஒரு நிறுவனம்.
3) பிரபல கல்விமான்கள் புத்திஜீவிகளின் வழி காட்டலில் இயங்கும் ஒரே ஒரு நிறுவனம்.
4) தகவல் தொழில்நுட்பத்தில் புதிய வரவுகளை உள்ளடக்கிய பாடத்திட்டம்.

IBMS பின்வரும் நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்டது

1) இலங்கை கணனிகள் பயிற்றுவிப்பாளர் சங்கத்தில் உறுப்புரிமை.
2) சர்வதேச கணனிகள் பயிற்றுவிப்பாளர் சங்கத்தில் உறுப்புரிமை.
3) இலங்கைத் தகவல் தொழில்நுட்ப தொழிற்துறை சமாசத்தில் உறுப்புரிமை.
4) இலங்கை மென்பொருள் தொழிற்துறைச் சங்கத்தில் உறுப்புரிமை.
5) விஞ்ஞான தொழில்நுட்ப பேரவையினது அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.
6) Infotel அமைப்பின் ஊடான வெளிநாட்டு பிரதிநிதித்துவம், Infotel விபர கொத்தில் உள்ளடக்கம்.
7) மூன்றாம் நிலை தொழில் கல்வி ஆணைக்குழுவினால் பதியப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.
8) கொழும்பு பல்கலைகழகத்தின் கணனி தொழில்நுட்ப நிறுவனத்தின் (ICT) கணனி தொழில்நுட்பமானி பட்டப்படிப்புக்கான கற்கை நெறியை கற்பிப்பதற்கான அங்கீகாரம், ACTOS இன் சிபாரிசு.
9) கணனி தொழில்நுட்ப தேசிய பரீட்சையின் பிரயோக கணனித்துவ உயர்தர பிரயோக கணனித்துவ டிப்ளோமா கற்கை நெறிகளை கற்பிப்பதற்கான அங்கீகாரம்.
10) தேசியபயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் நடாத்தப்படும் Sri Lanka Computer Driving Licence கற்கை நெறியைக் கற்பிப்பதற்கான ACTOS இன் சிபாரிசு.

சிறந்த நிறுவனத்தை தெரிந்து கொள்ளுங்கள்
எமது சிறப்பு புலமைப்பரிசில் திட்டம் நாளை உதயனில் ...

யாழ்நகரில் முதன்முதலாக மாபெரும் கணனிக்கண்காட்சி மிக விரைவில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.12.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.